

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 92 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 24 – வெள்ளிக்கிழமை 10 நவம்பர் 2023 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 92 : Thiruvalluvar Year - 2054 - Ayppasi 24 - Friday 10 November 2023 - Kovai ★★ 8 Pages ₹5.00


## 20 சதவிகிதம் போனசுடன் – தமிழ்நாடு

# தேயிலை தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு ஊதியம் அதிகரிப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, நவ. 10-**

**தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு திருத்தியமைக்கப்பட்ட தினக்கூலி, ஏழாவது ஊதியக்குழுவின் திருத்திய ஊதிய விகிதம் மற்றும் 20% போனஸ் வழங்கிட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு :-

தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் உரிமைகளைக் காப்பதோடு, தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது வழியில் செயல்பட்டு வரும் திராவிட மாடல் அரசு மேற்கொண்டு, தொழிலாளர்கள் நலனை கண்ணின் இமைபோல் காத்து வருகிறது.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு நீலகிரி மாவட்டத்தின் வனப்பகுதிகள் மற்றும் பிற பொருத்தமான பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் வேலைவாய்ப்பு அளிப்பதை நோக்கமாகக்கொண்டு, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமானது (TANTEA) 1976 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் நிலவும் கடுமையான நிதி நெருக்கடிக்கிடையிலும், ஓய்வுபெற்ற தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதியப் பணப்பலன்களை வழங்கும்பொருட்டு. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே ரூ.29.38 கோடியினை வழங்கிட உத்தரவிட்டதன் அடிப்படையில், 1,093 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று, பணி ஓய்விற்குப் பிறகும் தங்களுடைய குடியிருப்புகளை காலி செய்யாத தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்கள் நலன் கருதி, நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டு வரும் ரூ.14 இலட்சம் மதிப்பிலான அடுக்குமாடிக் குடியிருப்புக்கான பயனாளிகளின் பங்களிப்பை அரசே ஏற்க முடிவு செய்து, ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் மேற்காணும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு இடம்பெயர ஏதுவாக, முதலமைச்சர் அவர்கள் குடியிருப்புகளின் பயனாளிகள் பங்களிப்பாக ரூ.13.46 கோடியை ஒரு சிறப்பு நிகழ்வாக வழங்கிட உத்தரவிட்டுள்ளார்.

இவற்றின் வாயிலாக தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் சமூக மற்றும் பொருளாதார



நிலையை உறுதி செய்திட தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் தொடர் முயற்சிகள் புலனாகும்.

இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்கள் நாளொன்றுக்கு தாங்கள் பெற்றுவரும் தினக்கூலி ரூ.375/ஐ, திருத்தியமைக்கப்பட்ட தினக்கூலியை நடைமுறைப்படுத்தும் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், தனியார் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதைப் போல, நாளொன்றுக்கு ரூ.438/ ஆக உயர்த்தி வழங்கிட வேண்டுமென்று நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வந்தனர். மேலும், 3-11- 2023 அன்று தங்களைச் சந்தித்த நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா அவர்களிடம் இந்தக் கோரிக்கையையும், நீண்டகாலமாக உள்ள இதர கோரிக்கைகளையும் கனிவுடன் பரிசீலித்து, அரசுக்குப் பரிந்துரைக்க வேண்டுமெனக் கோரியிருந்தனர்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் மேற்படி கோரிக்கைகளை முதலமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து, நிறைவேற்றிட வேண்டுமென்று, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா அவர்களும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தனியார் தோட்டத் தேயிலை தொழிலாளர்களுக்கு இணையாக தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கும் திருத்தியமைக்கப்பட்ட தினக்கூலியாக நாளொன்றுக்கு ரூ.438/ வழங்கிடவும், அதனை உடனடியாக நடைமுறைப்படுத்திடவும் உத்தரவிட்டுள்ளார். இதற்கான தொடர் செலவினம் ஆண்டொன்றுக்கு ரூ.7.78 கோடி ஆகும். அதோடு, TANTEA தொழிலாளர்களுக்கு 20% போனஸ் வழங்கவும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகப் (TANTEA) பணியாளர்களுக்கு ஏழாவது ஊதிய குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் திருத்திய ஊதிய விகிதங்களை அமல்படுத்துவதற்கான ஆணைகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டு, அவை நடைமுறைப்படுத்தாமல் இருந்த நிலை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்ததையடுத்து, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், TANTEA பணியாளர்களுக்கு திருத்திய ஊதிய விகிதங்களை நிலுவைத் தொகையுடன் உடனடியாக வழங்கவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதற்காக TANTEAக்கு கூடுதலாக 12.78 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். இந்த திருத்திய ஊதிய விகிதம் நடைமுறைபடுத்தப்படுவதால் 212 பணியாளர்கள் பயனடைவார்கள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார் என்று அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க

## ஆளுநருக்கு உத்தரவிடக் கோரிய தமிழ்நாடு அரசின் வழக்கு!

### உச்சநீதிமன்றத்தில் இன்று விசாரணை!

*புதுடெல்லி, நவ.10 -*

சட்டப்பேரவையில் நிறைவேற்றிய மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க உத்தரவிடக் கோரி, ஆளுநருக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள மனு இன்று விசாரணைக்கு வருகிறது.



எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில், ஆளுநர்கள் மூலமாக ஒன்றிய பா.ஜ.க. அரசு பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கி வருகிறது.

குறிப்பாக, சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர்கள் காலம் தாழ்த்தி வருகின்றனர்.

இந்நிலையில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டுள்ள பல்வேறு மசோதாக்களுக்கு, ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்தி வரும் ஆளுநர் ஆர்.என்.ரவி அம்மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க உத்தரவிடக் கோரி, உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மனு தாக்கல் செய்துள்ளது.

இந்த மனுவில், சட்டமன்றங்களில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க ஆளுநர்களுக்கு காலக்கெடு விதிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்த மனுவை விரைவாக விசாரிக்க வேண்டுமென்று, மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் உச்சநீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனிடையே, ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிரான தமிழ்நாடு அரசின் மனு, இன்று (10ஆம் தேதி) உச்சநீதிமன்றத்தில் விசாரிக்கப்படவுள்ளது.

தலைமை நீதிபதி சந்திரசூட், பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய 3 நீதிபதிகள் அமர்வில் விசாரணைக்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

இதேபோல், ஆளுநர்களுக்கு எதிராக பஞ்சாப் மற்றும் கேரளா அரசுகளும் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

---

### தமிழ்நாடு

## நுகர்பொருள் வாணிபக் கழக பணியாளர்களுக்கு 20 % போனஸ்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, நவ. 10-**

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பணியாளர்களுக்கு 20 சதவிகித தீபாவளி போனஸ் வழங்கிட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்தி வருமாறு:-

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் “C” மற்றும் “D” பிரிவு பணியாளர்களுக்கு 2022-2023 ஆண்டுக்கான போனஸ் (Bonus) 8.33% மற்றும் கருணைத் தொகை (Ex-gratia) 11.67% ஆக 20% 2023-224-இல் வழங்க முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

போனஸ் சட்டத்தின் கீழ் வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்களுடைய சம்பளத்தில் 20 சதவீதம் (போனஸ் மற்றும் கருணைத் தொகை) வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இது தவிர தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ரூ.3000/- கருணைத் தொகையாக வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இதன்படி, தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மண்டலங்கள், நவீன அரிசி ஆலைகள், கிடங்குகள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் சுமார் 49,023 பணியாளர்களுக்கு ரூ.29/- கோடி போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்க ஆணையிடப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.


---

## பா.ஜ.க.வின் நட்சத்திரப் பேச்சாளராக ஜொலிக்கும் அமலாக்கத்துறை!

### காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சனம்!

குவாலியர், நவ. 10 -

பா.ஜ.க.வின் நட்சத்திரப் பேச்சாளராக அமலாக்கத்துறை ஜொலிப்பதாக, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடுமையாக விமர்சித்துள்ளார்.



மத்தியப்பிரதேச மாநிலம் குவாலியரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில், காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு ஆதரவாக, அக்கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பேசினார்.

அப்போது, மத்தியப்பிரதேசத்தில் காங்கிரசுக்கு தொகுதிக்கு ஒரு வேட்பாளர் தான் இருக்கிறார்.

ஆனால், பா.ஜ.கவுக்கு ஒவ்வொரு தொகுதிக்கும் 4 வேட்பாளர்கள் உள்ளனர். கண்ணுக்குத் தெரிந்த பா.ஜ.க. வேட்பாளர் ஒருவரும், கண்ணுக்கு தெரியாத மேலும் 3 வேட்பாளர்கள் உள்ளதாகவும் சாடினார்.

முதல் நபராக அமலாக்கத்துறை, பா.ஜ.க.வின் நட்சத்திரப் பேச்சாளராக ஜொலித்து வருவதாகவும், இரண்டாவது நபராக, சி.பி.ஐ. எதிர்க்கட்சி வேட்பாளர்களை பலவீனப்படுத்த முயன்று வருவதாகவும், மூன்றாவது வேட்பாளராக வருமானவரித்துறை திகழ்வதாகவும் கார்கே விமர்சித்தார்.

காங்கிரஸ் கட்சி நாட்டுக்கு என்ன செய்தது என்று பிரதமர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், நாட்டின் ஜனநாயகத்தையும், அரசியல் சட்டத்தையும் காங்கிரஸ் பாதுகாத்ததால்தான், மோடி தற்போது பிரதமராக உள்ளதாக குறிப்பிட்டார்.

ஒன்றியத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தவுடன் நாடு முழுவதும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார்.

---

### தொழில் தொடங்குவோருக்கான

## ஏற்றுமதி இறக்குமதி வழிமுறைகள் பயிற்சி!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, நவ.10-*

ஏற்றுமதி சார்ந்த தொழில் துவங்க விரும்பும் மற்றும் தற்போது உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்வோருக்கான ஏற்றுமதி இறக்குமதி வழிமுறைகள் குறித்த பயிற்சி பெறுவதற்காக இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது தமிழ்நாடு அரசு.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு வருமாறு:-

இந்தியாவில் தற்போது உற்பத்தி பொருட்கள் / சேவைகளை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மூலமாக தொழில்கள் விரிவடைவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து கொண்டே உள்ளன. எனவே ஏற்றுமதி பற்றியும் அதன் வழிமுறைகளை பற்றியும் தெளிவாக அறிந்து கொள்வது அவசியமாகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன வளாகத்தில், ஏற்றுமதி இறக்குமதி வழிமுறைகளையும், சட்ட திட்டங்களையும் குறித்த பயிற்சி வரும் 21.11.2023 முதல் 23.11.2023 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் ஏற்றுமதி சந்தையின் தேவை, கொள்முதலுக்கான வாய்ப்புகள், ஏற்றுமதி இறக்குமதி சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்கள், வங்கி நடைமுறைகள், அந்நிய செலாவணியின் மாற்று விகிதங்கள், காப்பீடு குறித்த தகவல்கள், ஏற்றுமதி இறக்குமதி விதிமுறைகள் மற்றும் ஆவணங் கள், போன்றவை பயிற்றுவிக்கப்படும். மேலும், இப்பயிற்சியில் ஏற்றுமதியாளர்களுக்கான ஊக்க உதவிகள் பற்றியும் அவைகளை பெறும் முறைகளை பற்றியும் ஆலோசனைகளும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விவாதிக்கப்படும்.

ஏற்றுமதி சார்ந்த தொழில் துவங்க விரும்பும் அல்லது தற்போது உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்ய விரும்பும் 18 வயது நிரம்பிய 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைவரும் சேரலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்:

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, இ.டி.ஐ.ஐ அலுவலக சாலை, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 032. 04422252081/ 22252082, 8668102600 / 86681 00181.

இவ்வாறு தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 10-11-2023

# "மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல"

தமிழ்நாடு, கேரளா, பஞ்சாப் ஆகிய மாநில அரசுகளின் சார்பில் அந்தந்த மாநில ஆளுநர்களின் செயல்பாடுகளுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது. 'மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல நீங்கள் என்பதை உணருங்கள்' என்று ஆளுநர்களுக்கு அறிவுறுத்தி இருக்கிறது உச்சநீதிமன்றம். இதை விட நெத்தியடி இருக்க முடியாது. 'ரொம்ப ஆடாதீர்கள், அடங்குங்கள்' என்பதுதான் இதன் உள்ளடக்கம் ஆகும்.

**பாரதிய ஜனதா கட்சி, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு ஆளுநர்கள் மூலமாக குடைச்சல் கொடுத்து வருகிறது. எந்தத் தகுதியும் இல்லாதவர்கள் ஆளுநர்களாக வருவதால், அவர்கள் எஜமானர்களின் உத்தரவுக்கு கட்டுப்பட்டுச் செயல்படுகிறார்கள். தங்களுக்கு ஏதோ தகுதிகள் வந்து விட்டதைப் போல நினைத்து ஆட்டங்கள் போடுகிறார்கள். ஒரு மாநிலத்துக்கு ஆளுநராக வந்துவிட்டதாலேயே, அந்த மாநிலமே தங்களுக்குச் சொந்தம் என நினைத்துக் கொள்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு இருக்கிறது என்பதையே மறந்துவிட்டு, தாங்கள் ஏதோ மக்கள் தலைவர்களைப் போல நடந்து கொள்கிறார்கள்.**

**அதுவும் தமிழ்நாடு ஆளுநரின் செயல்பாடுகள் என்பவை அத்து மீறியதாக மட்டுமல்ல, அருவெறுப்பானவையாகவும் இருக்கின்றன. மாநிலத்தின் நன்மைக்காகத் துரும்பைக் கூட நகர்த்தாத அவர், தமிழ்நாட்டுக்கான கெடுதல்களை வரிசையாகச் செய்து வருகிறார். தமிழ், தமிழர், தமிழ்நாட்டின் பெருமைகளைச் சிதைப்பது ஒன்றையே தனது நோக்கமாகக் கொண்டுள்ளார். எதையாவது சொல்லி, மாநிலத்தில் குழப்பம் ஏற்படுத்துவதே அவரது வேலையாக இருக்கிறது. பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலைக்கும் அவருக்கும் தான் இப்போது போட்டி என்று சொல்லத் தக்க வகையில் ஆளுநர் செயல்பட்டு வருகிறார். அதேநேரத்தில், மாநில நிர்வாகம் அனுப்பும் கோப்புகளை தாமதப்படுத்தியும், தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பும் சட்டங்களுக்கு அனுமதி தராமலும் தனது அரசியல் சட்டக் கடமைகளைக் கூடச் செய்யாமல் சதி செய்கிறார்.**

எத்தனையோ முறை - எவ்வளவோ வகை உணர்த்திய பிறகும் ஆளுநர் ரவி, உணர்வதாகத் தெரியவில்லை. திருந்துவதற்கான அறிகுறி இல்லை. இதன் இறுதிக் கட்டமாகத்தான் அவர் மீது உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது தமிழ்நாடு அரசு. இதே போலத் தான் கேரளாவின் நிலைமையும், பஞ்சாப் மாநிலத்தின் நிலைமையும்.

பஞ்சாப் மாநிலத்தில் ஆம் ஆத்மி கட்சியின் ஆட்சி நடக்கிறது. மாண்புமிகு பகவந்த் மான், முதலமைச்சராக இருக்கிறார். தமிழ்நாட்டில் ஆளுநராக இருந்த பன்வாரிலால் புரோகித் தான், இப்போது பஞ்சாப் மாநிலத்தில் ஆளுநராக இருக்கிறார். பஞ்சாப் மாநில அரசு அனுப்பி வைக்கும் சட்டமுன் வடிவுகளுக்கு அனுமதி தராமல் நிறுத்தி வைத்தார் ஆளுநர் பன்வாரிலால். கடந்த அக்டோபர் 20 ஆம் தேதி தாக்கல் செய்ய வேண்டிய மூன்று நிதி மசோதாக்களை நிறுத்தி வைத்து விட்டார் ஆளுநர். சட்டசபை கூடுவதற்கு முந்தைய நாள் – அதாவது அக்டோபர் 19 ஆம் தேதியன்று, மாநில அரசுக்கு ஆளுநர் ஒரு கடிதம் எழுதுகிறார். அந்த மசோதாக்களை ஆய்வு செய்ய வேண்டி உள்ளது என்று அதில் குறிப்பிட்டு இருந்தார் ஆளுநர்.

சட்டசபையைக் கூட்டக் கூடாது என்றும் ஆளுநர் தடை போட்டார். அதனால் சபை கூடிய சில மணிநேரங்களிலேயே ஒத்தி வைக்கப்பட்டது. இப்படி பல்வேறு குழப்பங்கள் நடக்கிறது பஞ்சாப் மாநிலத்தில். இதனைத் தடுக்கவே உச்சநீதிமன்றத்துக்கு போனது பஞ்சாப் அரசு. "சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க ஆளுநருக்கு உத்தரவிட வேண்டும்" என்று கோரியது பஞ்சாப் அரசு. உடனே, ஆளுநர் என்ன செய்தார் தெரியுமா? நிறுத்தி வைக்கப்பட்ட மூன்று நிதிமசோதாக்களில் இரண்டைக் கையெழுத்துப் போட்டு அனுப்பி விட்டார்.

இதையே உச்சநீதிமன்றம் கேள்வியாகக் கேட்டது. உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா அமர்வில் மாட்டிக் கொண்டார் பஞ்சாப் ஆளுநர். "சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்குமாறு ஆளுநருக்கு உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தை அணுக வேண்டிய கட்டாயத்துக்கு மாநில அரசுகள் தள்ளப்பட்டு இருப்பது கவலை அளிப்பதாக உள்ளது. இப்பிரச்சினை உச்சநீதி மன்றத்துக்கு வந்த பிறகு தான் ஆளுநர்கள் செயல்படுகிறார்கள். இதே போலத்தான் முன்பு தெலுங்கானா ஆளுநரும் நடந்து கொண்டார். மாநில அரசு அனுப்பும் மசோதாக்களை ஆய்வு செய்யலாம். ஆனால் வழக்கு உச்சநீதிமன்றத்துக்கு வருவதற்கு முன்பாக ஒப்புதல் தர வேண்டும்" என்று சொன்ன நீதிபதிகள்...

**"தாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்ல என்பதை ஆளுநர்கள் மறந்துவிடக் கூடாது" என்று எச்சரிக்கையாகவும் கிண்டலாகவும் சொல்லி இருக்கிறார்கள். மாநில ஆளுநர்களுக்கு முதலில் அறிவுறுத்த வேண்டியது இதுதான். இது ஒரு நியமனப் பதவி. தங்களை அண்டி இருப்பவர்களை திருப்திப்படுத்து வதற்காகத் தரப்படும் டம்மி பதவி. 'இது ஒரு வேஸ்ட்டான பதவி' என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு முறை சொன்னார்கள். அதுதான் உண்மை. 'நீயே அயிரை மீன், உனக்கு ஏன் விலாங்குச் சேட்டை?' என்று ஒரு முதுமொழி உண்டு. அதனை ஆளுநர்களாக வருபவர்கள் உணர்வது இல்லை.**

**தமிழ்நாடு சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பி வைப்பட்ட 14 சட்ட முன் வடிவுகளுக்கு அனுமதி தராமல் ஊர் சுற்றிக் கொண்டு இருக்கிறார் ஆளுநர் ரவி. இதுபோல் 8 மசோதாக்களுக்கு அனுமதி தராமல் கேரள ஆளுநர் ஆரீப் முகமது கான் அனுமதி தரவில்லை. வழக்கு போட்ட பிறகு பஞ்சாப் ஆளுநர் பன்வாரிலால் செயல்படத் தொடங்கி இருக்கிறார். இந்த வழக்குகள் அனைத்தும் மொத்தமாக வரும் 10 ஆம் தேதி விசாரணைக்கு வர இருக்கின்றன. இதன்பிறகாவது தமிழ்நாடு ஆளுநர் திருந்துகிறாரா எனப் பார்ப்போம்.**



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு திருவல்லிக்கேணி பகுதி, 120வது வட்டம், முத்தையா தெருவைச் சேர்ந்த பொதுமக்களுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புத்தாடைகள் வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி. உள்பட கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ்

# அதிகபட்சமாக பயன்பெறும் மாணவிகள் - நாமக்கல் மாவட்டம் முதலிடம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. பெருமிதம்!

நாமக்கல், நவ. 10 -

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், கரடிப்பட்டியில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் முன்னிலை வகித்தார்.

முகாமில் நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்துகொண்டு, 462 பயனாளிகளுக்கு ரூ.61.33 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசும்போது,



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/ வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெற விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்டவர்கள் இ-சேவை மூலம் மேல் முறையீடு செய்யப்பட்டு வரப்பெற்ற விண்ணப்பங்களை வட்டாட்சியர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெற சரி பார்ப்பு பணி, மேல்முறையீடு செய்தவர்களின் மனுக்களை பரிசீலனை செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மேல்முறையீடு செய்த குடும்பத் தலைவிகளுக்கு அடுத்த இரண்டு, மூன்று தினங்களில் மாதம் தோறும் ரூ.1,000/ வழங்கப்பட உள்ளது.

இத்திட்டம் என்பது தொடர் திட்டமாகும். எனவே, விண்ணப்பிக்காத குடும்பத்தலைவிகளும் கூட விண்ணப்பித்து இத்திட்டத்தில் பயன்பெறலாம்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு பள்ளியில் பயின்று மேற்படிப்பு / தொழில்நுட்ப படிப்பு பயிலும் மாணவிகளுக்கு மாதம் தோறும் ரூ.1,000/ வழங்கும் புதுமை பெண் திட்டம் தொடங்கி வைத்து செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டில் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில் அதிகபட்சமான மாணவிகள் பயன்பெற்று நாமக்கல் மாவட்டம் முதலிடத்தில் இருப்பது பெருமைக்குரியது ஆகும். மேலும், நாமக்கல் மாவட்டத்தில் நியாய விலைக் கடைகளில் பொதுமக்களுக்கு அரிசி, சர்க்கரை, பருப்பு, கோதுமை உள்ளிட்ட உணவு பொருட்கள் தரமான முறையில் வழங்கப்பட்டு வருகின்றது.

இன்றையதினம் கரடிப்பட்டியில் மக்கள் தொடர்புத் திட்ட முகாம் நடைபெறுவதையொட்டி, இப்பகுதியில் நீண்ட நாட்களாக தீர்க்கப்படாத கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் ஒரு மாத காலத்திற்கு முன் துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர்கள் மற்றும் வட்டாட்சியர் உள்ளிட்ட வருவாய்த்துறை அலுவலர்கள் கரடிப்பட்டி கிராம பகுதிக்கு நேரடியாக வருகை புரிந்து கடந்த ஒரு மாத காலமாக தொடர்ந்து மனுக்களைப் பெற்று வந்தனர். மேலும் அந்த மனுக்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு கள ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் இன்று 462 பயனாளிகளுக்கு ரூ.61.33 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வறாக மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை நிறைவேற்றி வரும் அரசிற்கு தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தெரிவித்தார்.

முன்னதாக வேளாண் பொறியியல் துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, கால்நடை பராமரிப்பு துறை, பட்டு வளர்ச்சி துறை, சமூக நலத்துறை, தாட்கோ, வருவாய்த்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட துறை, முதலமைச்சர் மற்றும் பாரத பிரதமரின் மருத்துவ அடையாள அட்டைகள் வழங்கும் முகாம் உள்ளிட்ட அரசு துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளதை மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் பார்வையிட்டார்.

தொடர்ந்து, இம்முகாமில்,அரசின் பல்வேறு துறை சார்பில் 462 பயனாளிகளுக்கு ரூ.61.33 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் மு.செந்தில்குமார், ஊராட்சி மன்றத் தலைவர் வீ.நாகராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.சிவக்குமார், மகளிர் திட்ட இயக்குநர் திருமதி மா.பிரியா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் த. செல்வகுமரன், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் மா.க.சரவணன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்ச.பாலாகிருஷ்ணன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ச.பிரபாகரன், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் (பொறுப்பு) மரு.எம்.நடராஜன், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் எஸ்.துரைசாமி, தோட்டக்கலைத்துறை (துணை இயக்குநர்) கே.கணேசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கே.முருகன், நாமக்கல் வட்டாட்சியர் சக்திவேல் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மூத்த பத்திரிகையாளர்

# ஆர்.கே.ராதாகிருஷ்ணனுக்கு முனைவர் பட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, நவ.10 -

மூத்த பத்திரிகையாளர் ஆர்.கே.ராதாகிருஷ்ணன் முனைவர் பட்டம் பெற்றதையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தியுள்ளார்.



இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

**முனைவர் ஆர்.கே.ராதாகிருஷ்ணனுக்கு வாழ்த்துகள்!**

**ஆண்டுகள் எத்தனையானாலும் அறிவு தேடலுக்கு எல்லை இல்லை எனப் பயணிக்கும் நீங்கள் தமிழ்நாட்டுக்குத் திரும்பியவுடன் சந்திப்போம்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் அமைப்புகளான மாணவரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் நேர்காணல் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில், சட்டத்துறை அமைச்சர், தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் கழக மாணவரணி இணைச் செயலாளர் பூவை சி.ஜெரால்டு, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கே.எஸ்.ச.இளையச்சூரியன், மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.எஸ். கருப்பையா, க.மதியழகன், குன்றாண்டார்கோவில் மேற்கு ஒன்றியச் செயலாளர் ஓ.எஸ்.வெங்கடாசலம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் எம்.செந்தில்குமார், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மு.கலைஞர் கருணாநிதி, மாணவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் சபா, சதீஷ், தெய்வானை, பிரசன்னா, ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஆ.லட்சுமணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) வாணி, திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் உள்ளனர்.

### தனிப்பட்ட அதிகாரம் எதுவும் இல்லை

# ஆளுநர்களின் பதவிகள் சம்பிரதாய பதவிகள்தான்!

### ‘தினகரன்’ தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, நவ. 10 -

ஆளுநர்களின் பதவிகள் சம்பிரதாய பதவிகள்தான் அவர்களுக்கென்று தனிப்பட்ட அதிகாரம் எதுவும் இல்லை என ‘தினகரன்’ நாளேடு 8.11.2023 அன்று தலையங்கம் வெளியிட்டுள்ளது.



தினகரன்

ஆளுநர்களின் கடமை

அத்தலையங்கம் வருமாறு:

ஆளுநர்களின் பதவிகள் சம்பிரதாய பதவிகள் தான். அவர்களுக்கு என்று தனிப்பட்ட அதிகாரம் எதுவும் இல்லை. மாநில அமைச்சரவை பரிந்துரைகளுக்கு, சட்டப்பேரவைகள் நிறைவேற்றிய மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது மட்டுமே ஆளுநரின் கடமைகள். முதல்வர் மற்றும் அவரது அமைச்சரவையைச் சேர்ந்த அமைச்சர்களிடமே அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இதை எல்லாம் மீறி பா.ஜ ஆட்சி இல்லாத மாநிலங்களில் ஆளுநர்கள் தனி ஆட்சி நடத்துவது தற்போது பெரும் சர்ச்சையை உருவாக்கி உள்ளது. மக்களால் தேர்வு செய்யப்பட்ட மாநில அரசுகள், முதல்வர்கள், சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் பா.ஜ ஆட்சி இல்லாத மாநிலங்களில் உள்ள ஆளுநர்கள் அதிகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு செயல்படுவது இப்போது உச்ச நீதிமன்றத்தின் கதவுகளை மாநில அரசுகள் தட்ட வேண்டிய சூழ்நிலைக்கு கொண்டு சென்று விட்டது.

டெல்லியில் ஆளும் ஆம் ஆத்மி அரசுக்கும், ஆளுநருக்குமான மோதல் உச்ச நீதிமன்ற விசாரணையில் உள்ளது. அதை தொடர்ந்து தெலங்கானா முதல்வர் சந்திரசேகரராவுக்கும், கவர்னர் தமிழிசைக்கும் மோதல் உச்சகட்டத்தில் உள்ளது. அதே போல் தமிழ்நாடு அரசுடன் மோதல் போக்கை தொடர்ந்த வண்ணம் இருக்கிறார் கவர்னர் ஆர்.என். ரவி. பஞ்சாப் மாநிலத்தில் ஆம்ஆத்மி முதல்வர் பகவந்த் மானுடன் தொடர்ந்து மல்லுக்கட்டி வருகிறார். தமிழ்நாட்டின் முன்னாள் ஆளுநரும், தற்போதைய பஞ்சாப் ஆளுநருமான பன்வாரிலால் புரோகித். கேரளாவிலும் மார்க்சிஸ்ட் முதல்வர் பினராய் விஜயன் ஆட்சிக்கு தொந்தரவு கொடுத்து வருகிறார் அங்குள்ள ஆளுநர் ஆரிப் முகமது கான். இதனால் ஆளுநரின் நடவடிக்கைகளை எதிர்த்து தமிழ்நாடு, கேரளா, தெலங்கானா, பஞ்சாப் மாநிலங்களில் உச்ச நீதிமன்றத்தில் வழக்குதொடர்ந்துள்ளன. குறிப்பாக மாநில சட்டப்பேரவைகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு ஒப்புதல் வழங்காமல் ஆளுநர்கள் இழுத்தடிக்கும் செயல்கள் அந்த மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பஞ்சாப் மாநிலம் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், ஆளுநர்கள் அரசியல்சாசன விதிகளுக்கு உட்பட்டு முடிவு எடுக்க வேண்டும். அவர் மாநில அரசின் முடிவுகளுக்கு கட்டுப்பட்டவர். சட்டப்பேரவையில் நிறைவேற்றிய மசோதாக்களை ஆய்வு செய்யவும், நிறுத்தி வைக்கவும், ஒப்புதல் அளிக்கவும் அவருக்கு அதிகாரம் உண்டு. இருப்பினும் ஒரு முறை மட்டுமே மசோதாக்களை நிறுத்தி வைத்து திருப்பி அனுப்ப ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. ஆனால் மசோதா ஒப்புதல் கேட்டு உச்ச நீதிமன்றத்திற்கு மாநில அரசுகள் வருவதற்கு முன்பு ஆளுநர்கள் முடிவு எடுத்து இருக்க வேண்டும். ஆளுநர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை என்பதை மறந்துவிட முடியாது’ என்று விளாசி உள்ளது.

பஞ்சாப் அரசு தொடர்ந்த வழக்கில் இந்த விமர்சனங்கள். தமிழ்நாடு அரசின் வழக்கு நாளை மறுநாள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. இதேபோல் மற்ற மாநிலங்கள் தொடர்ந்த வழக்கில் ஆளுநர்களின் செயல்பாடுகளை உச்ச நீதிமன்றம் ஆய்வு செய்ய உள்ளது. கடமையையும், பொறுப்பையும் மீறி, அரசியல் சாசனம் அளித்த அதிகாரத்திற்கு எதிராக நடந்து கொள்வதால் தான் இந்த பிரச்னைகள் எழுகின்றன.

அதேசமயம் பா.ஜ ஆளும் மாநிலங்களில் ஆளுநருக்கும், முதல்வர்களுக்கும் எந்தவித பிரச்சினையும் இல்லை. அப்படி பார்த்தால் திட்டமிட்டு எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்களை கொண்டு ஒன்றிய அரசு தனி ராஜ்ஜியம் நடத்துவது அப்பட்டமாக தெரிந்து விட்டது. தமிழ்நாட்டிலும் கவர்னர் ஆர்.என். ரவி மூலம் தொந்தரவுகள் அளிக்கப்படுகிறது. ஆனால் முதல்வர் மு.க.ஸ்டாலின் அதை நிச்சயம் உரிய வகையில் எதிர்கொள்வார் என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு தெரியும். அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலினின் செயல்திறன் புரியும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### சென்னையில் தீபாவளி தீ விபத்தை தடுக்க

# தயார் நிலையில் 1250 தீயணைப்பு வீரர்கள்!

### தீயணைப்பு வாகனங்களுடன் ஆயத்தமாக உள்ளனர்!

சென்னை, நவ.10 -

தீபாவளி பட்டாசு விபத்தை தவிர்க்க தீயணைப்புத் துறை முன் ஏற்பாடுகளை செய்துள்ளது. தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களில் இருந்து வீரர்களை வரவழைத்து உள்ளது.

சென்னையில் 42 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. இவற்றில் பணியாற்றும் 1000 தீயணைப்பு வீரர்களுடன் தீபாவளி பட்டாசு விபத்தை தடுக்க முன்னெச்சரிக்கையாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது தவிர பிற மாவட்டங்களில் இருந்து 26 தீயணைப்பு வண்டிகளுடன் 250 வீரர்கள் வரவழைக்கப்பட்டுள்ளது. சென்னையில் குடிசைப் பகுதிகள் மற்றும் நெருக்கமான இடங்களில் பட்டாசு தீ விபத்து ஏற்படாமல் தடுக்க தீயணைப்பு வண்டிகளு டன் 1250 வீரர்கள் தயார் நிலையில் உள்ளனர். தீயணைப்புத் துறை இணை இயக்குனர் பிரியா ரவிச்சந்திரன் மேற்பார்வையில் நகரம் முழுவதும் தீபாவளி தீ விபத்தை தடுக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

சென்னையில் பட்டாசு கடைகள் அதிகமாக உள்ள பகுதிகளில் தீயணைப்பு வண்டிகள் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன. தீயணைப்பு வண்டிகளுக்குத் தேவையான தண்ணீரை வழங்குவதற்கு சென்னை குடிநீர் வாரியத்தின் லாரிகளும் நிறுத்தப் பட்டுள்ளன. தற்போது மழைக்காலம் என்றாலும் பட்டாசு விபத்தால் அசம்பாவித சம்பவம் எதுவும் நடைபெறாமல் இருக்க விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை நகரில் 450 க்கும் மேலான பட்டாசு கடைகள் செயல்பட அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. நகரின் முக்கிய இடங்கள், மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (8.11.2023) வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தில், தேர்வான 23 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன், சுற்றுச் சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் துறைத் தலைவர் சுப்ரத் முஹபத்ர, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் தெபாஸிஸ் ஜானா, ஆகியோர் உள்ளனர்.




சென்னை கலைவாணர் அரங்கத்தில், நேற்று முன்தினம் (8.11.2023) ”தமிழ் அகராதியியலின் தந்தை” என்று போற்றப்படும் வீரமாமுனிவரின் பிறந்த நாளை முன்னிட்டு ”தமிழ் அகராதியியல் நாள் விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ”தமிழ்ப்பேசி” எனும் குறுஞ்செயலியை வெளியிட்டார். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு. இரா. செல்வராஜ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், செந்தமிழ்ச்சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### வீரமாமுனிவர் பிறந்தநாளை முன்னிட்டு

# தமிழ் அகராதியியல் நாள் விழா - 2023!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விருதுகளை வழங்கினார்!

சென்னை, நவ.10 -

‘தமிழ் அகராதியியலின் தந்தை’ என்று போற்றப்படும் வீரமாமுனிவரின் தமிழ்த்தொண்டைப் போற்றும் வகையில், அவரது பிறந்த நாளான நவம்பர் 8ஆம் நாளைத் ‘தமிழ் அகராதியியல் நாள் விழா’ வாகக் கொண்டாட தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ள அரசாணையின்படி, ‘தமிழ் அகராதியியல் நாள் விழா’ கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில், 2023ஆம் ஆண்டுக்கான ‘தமிழ் அகராதியியல் நாள் விழா’ சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (08.11.2023) சிறப்புற நடைபெற்றது. இவ்விழாவில், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பங்கேற்று, செல்வன் த.தினேசு (அரியலூர்), வா.பரணிப்பாவலன் (செங்கல்பட்டு), கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு (சென்னை), ச.கருத்தா ளன் (எ) காளிதாசன் (கடலூர்), புலவர் கோ.வெங்கடாசலம் (எ) பாவலர்கோ.மலர்வண்ணன் (தருமபுரி), செல்வன் மோ.நாகஅர்ச்சூன் (திண்டுக்கல்), செல்வி பெ.தனலட்சுமி (ஈரோடு), செல்வன் ச.வாசுதேவன் (எ) நடுநாட்டுத்தமிழன் (கள்ளக்குறிச்சி), செல்வி விண்மீன் (எ) சி.ஏமலதா (காஞ்சிபுரம்), அகநம்பி (தமிழ்மைம்பி) தி.பாலசுப்பிரமணியன் (கன்னியாகுமரி), முனைவர் வே.குழந்தைசாமி (கோயம்புத்தூர்), செல்வன் மு.சந்தோசுகுமார் (கிருட்டினகிரி), சித்தார்த்பாண்டியன் (எ) பெ.தங்கப்பாண்டி (மதுரை), செல்வி இர. அகிலா (நாகப்பட்டினம்), முனைவர் அ.செந்தில்குமார் (எ) தமிழ்க்குமரன் (பெரம்பலூர்), செல்வி மெ.சிவநந்தினி (புதுக்கோட்டை), சு.சோலைராசா (இராமநாதபுரம்), முனைவர் அ.மீனா (இராணிப்பேட்டை), முனைவர் தமிழ்ப்பரிதிமாரி (சேலம்), திருமதி கோ. ஆனந்தா (சிவகங்கை), பா.கோவிந்த ராசன் (தஞ்சாவூர்), மு.சுப்பிரமணி (தேனி), செல்வி இ.செல்வகவிதா (தென்காசி), முனைவர் ச.சரவணன் (திருப்பத்தூர்), செல்வி பு. கீர்த்தனா (திருப்பூர்), முனைவர் சி.இராமச்சந்திரன் (திருவள்ளூர்), செல்வி ச.கீர்த்தனா (திருவண்ணாமலை), தி.தினேசுபாபு (திருவாரூர்), வ.செல்வமாரி முத்து (திருநெல்வேலி), நாவை.சிவம் (எ) து.வை.சிவராமலிங்கம் (திருச்சிராப்பள்ளி), முனைவர் செ.அந்தோணி ராகுல் கோல்டன் (தூத்துக்குடி), செல்வன் இர.கண்ணன் (நாமக்கல்), செல்வன் ம.ச.சந்தீப் (வேலூர்), பெ.கலியன் (விழுப்புரம்), திருமதி பி.நிலா (விருதுநகர்) ஆகியோருக்கு 2022ஆம் ஆண்டுக்கான ‘தூயதமிழ்ப் பற்றாளர் விருதும்’, தென்மொழி - திங்களிதழ் சார்பாக முனைவர் மா.பூங்குன்றன் அவர்களுக்கு 2022ஆம் ஆண்டுக்கான ‘தூயதமிழ் ஊடக விருதும்’ மரபுக்கவிதை பிரிவில் ப.எழில்வாணன் மற்றும் புதுக்கவிதை பிரிவில் ம.சுடர்த்தமிழ்ச்சோழன் ஆகியோருக்கு 2022ஆம் ஆண்டுக்கான ‘நற்றமிழ்ப் பாவலர் விருதும்’ என மொத்தம் 38 தமிழ்ப் பற்றாளர்களுக்கு விருதுகளை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

மேலும், 2023 ஆம் ஆண்டுக்கான ‘அகராதி ஆய்வு மலர்’, ‘வட்டார வழக்குச் சொற்பொருள் அகராதி’, ‘மருத்துவக் கலைச்சொல் அகராதி’, ‘செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் திருந்திய பதிப்பு (7 தொகுதிகள்), பன்மொழி அகராதியுடன் கூடிய குறுஞ்செயலி ஆகியவற்றை வெளியிட்டார்.

இவ்விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு.இரா.செல்வராஜ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

### விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

# வீரதீரச் செயல்களுக்கான அண்ணா பதக்கம்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ.10 -

வீரதீரச் செயல்களுக்கான அண்ணா பதக்கம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றது. இதற்கான விண்ணப்பங்களை தமிழ்நாடு அரசு வரவேற்றுள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

வீர, தீரச் செயல்களுக்கான “அண்ணா பதக்கம்” ஒவ்வொரு ஆண்டும் முதலமைச்சர் அவர்களால், குடியரசு தின விழாவின் போது வழங்கப்படுகிறது.

வீர, தீரச் செயல் புரிந்த தமிழகத்தைச் சேர்ந்த விண்ணப்ப தாரர்கள் மட்டுமே இப்பதக்கத்தினைப் பெறத் தகுதியுடையவராவர். பொதுமக்களில் மூவருக்கும், அரசு ஊழியர்களில் (சீருடை பணியாளர்கள் உட்பட) மூவருக்கும் இப்பதக்கங்கள் வழங்கப்படும். பதக்கம் பெற வயது வரம்பு ஏதுமில்லை. இவ்விருது ரூ.1,00,000/ (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)க்கான காசோலை, ஒரு பதக்கம் மற்றும் தகுதியுரை ஆகியவை கொண்டதாகும். இப்பதக்கம் முதலமைச்சர் அவர்களால் 26.01.2024 குடியரசு தினத்தன்று வழங்கப்படும்.

2024ஆம் ஆண்டிற்கான ‘வீரதீரச் செயல்களுக்கான அண்ணா பதக்கம்’ விருதுக்கு பரிந்துரைகள் கோரப்படுகின்றன. வீரதீரச் செயல்களுக்கான அண்ணா விருதுக்கான விண்ணப்பங்கள் / பரிந்துரைகள் இந்த நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்ட https://awards.tn.gov.in என்ற இணையதளத்தில் மட்டுமே பெறப்படும். வீரதீரச் செயல்களுக்கான அண்ணா விருதுக்கான விண்ணப்பங்கள் / பரிந்துரைகள் இணையதளத்தில் அதற்கென உள்ள படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை உள்ளடக்கியதாகவும், விருதுக்காக பரிந்துரைக்கப்படும் நபர்களின் வீரதீர செயல்களைப் பற்றி எடுத்துரைக்கும் தகுதியுரை (அதிகபட்சம் 800 வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்) தெளிவாகவும், தேவையான அனைத்து விவரங்களும் முறையாக நிரப்பப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

வீரதீரச் செயல்களுக்கான அண்ணா விருதுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் 15 டிசம்பர், 2023 ஆகும். இணையதளத்தில் பெறப்படும் விண்ணப்பங்கள் / பரிந்துரைகள் மட்டுமே பரிசீலிக்கப்படும். உரிய காலத்திற்குள் பெறப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். பதக்கம் பெறத் தகுதியுள்ளவர்கள், இதற்கென அரசால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவால் தெரிவு செய்யப்படுவர்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.



நாமக்கல் மாவட்டம் நாமக்கல் வட்டம், கரடிப்பட்டியில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு, 462 பயனாளிகளுக்கு ரூ.61.33 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, சிறப்புரையாற்றினார். முகாமில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அரசு துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத் ஏற்பாட்டில் பி.எஸ்.ஜி. கலைக்கல்லூரி முன்னாள் சேர்மன் செ.திலகராஜ் தலைமையில் நடைபெற்ற மாநில அளவிலான பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளை திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., துவக்கி வைத்து வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். இதில் மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் கா.பொன்ராஜ், திருப்பூர் தெற்கு மாநகர கழகச் செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், திருப்பூர் வடக்கு மாநகரக் கழகச் செயலாளர், மாநகராட்சி மேயர், ந.தினேஷ்குமார் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், மாநகரம் 40வது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் பெய்த கன மழையினால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் பார்வையிட்டார். நிகழ்வில் பொறியாளர் விஜயகுமார், மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், மண்டல குழு தலைவர்கள் ப.க.பழனிசாமி, குறிஞ்சி என்.தண்டபாணி, மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இரா.ரமேஷ்குமார் கருங்கல்பாளையம் பகுதி கழக பொருளாளர் தி.க.முருகேஷ், உள்ளிட்ட பலர் உள்ளனர்.



நீலகிரி தேசிய அளவில் சிறந்த சுற்றுலா கிராமமாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள ”உல்லாடா கிராமமானது தேர்வானதை ஒட்டி அக்கிராமத்திற்கு நேரில் சென்று ஊர் மக்களிடம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் வாழ்த்துகள் தெரிவித்தார். உடன் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### தொடக்க பால் உற்பத்தியாளர்கள்

# கூட்டுறவுச் சங்கங்களின் செயலாளர்களுக்கான பயிற்சி வகுப்பு!

## அமைச்சர் த.மனோ தங்கராஜ் சிறப்புரையாற்றினார்!

சென்னை, நவ.10-

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் நேற்று முன்தினம் (08.11.2023) பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் செயலாளர்களுக்கான பயிற்சி வகுப்பினை, சென்னை மாதவரம் பால் பண்ணையிலுள்ள ஆவின் திறன் மேம்பாட்டு மையத்தில் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

மாதவரத்தில் உள்ள ஆவின் திறன் மேம்பாட்டு மையத்தில் இன்று பால்வளத்துறை அமைச்சர் அவர்களால் “தேசிய பால் பண்ணை மேம்பாட்டுத் திட்டம் 2023-2024 (NPDD)” கீழ் நடத்தும் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் செயலாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி வகுப்பு (08.11.2023, 09.11.2023) துவங்கி வைக்கப்பட்டது.

இதில் வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, விழுப்புரம் என ஐந்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பணிபுரியும் தொடக்க பால் உற்பத்தி சங்கங்களின் (MPCS) செயலாளர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இக்கூட்டத்தில் பால்வளத்துறை கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர்/துணை பால் ஆணையர், (கூட்டுறவு) ரா.இலட்சுமணக் குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்ட அவைத்தலைவர் சிவ.மாணிக்கம் மறைவு!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்!

அரியலூர், நவ, 10-

அரியலூர் மாவட்ட கழக அவைத்தலைவர் சிவ. மாணிக்கம் மறைவு எய்தினார். தகவலறிந்த மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பளிங்காநத்தம் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அன்னாரின் திருவுடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

இதனை தொடர்ந்து பெரம்பலூர் மாவட்டக் கழக செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெரு நற்கிள்ளி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகர், மாவட்ட பொருளாளர் கு.ராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, ரெ.அசோக சக்கரவர்த்தி, பூ.செல்வராஜ், வா.சௌந்தர ராஜன், கோ. அறிவழகன், மா.அன்பழகன், இரா.மணிமாறன், ரெங்க, முருகன், ஆர். கலியபெருமாள், வி.எழில் மாறன், நகர செயலாளர் வெ.கொ.கருணாநிதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ. இளையராஜன்,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், ஒன்றிய பெருந்தலைவர் சுமதி அசோகசக்ரவர்த்தி,

மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கருப்புசாமி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வின்செண்ட் ராஜா, அரியலூர் தொ.மு.ச. செயலாளர் பி.வி.அன்பழகன்,

மாவட்ட பிரதிநிதிகள் மு.முத்தமிழ்ச் செல்வன், ஆர்.ஜி.மணிவேல், சி.ஆரோக்கியம், கோ.கனகராஜ், நெடுஞ்செழியன், ஒன்றிய அவைதலைவர் நெப்போலியன் லூர்துசாமி, ஒன்றிய துணை செயலாளர்கள் க.ரவி, ராஜா, மனோஜ், ஒன்றிய கழக நிர்வாகிகள் எம்.செல்வம், ஆனஸ்ட் அம்பிகாவதி,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ். ஆர்.முருகேசன்,

மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் உ. கருணாநிதி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் செல்வ.பிரபாகரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இலக்கியதாசன், ஒன்றிய தகவல்தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அருண், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் அடுத்த மாதம் தொடங்குகிறது!

புதுடெல்லி.நவ, 10-

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் வழக்கமாக நவம்பர் மாதம் 3வது வாரம் தொடங்கும். டிசம்பர் 25ந்தேதி கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன்பாக முடிவடையும். ஆனால், தற்போது 5 மாநில சட்டசபை தேர்தல்கள் நடந்து வருகின்றன. அதில், அரசியல் கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. தேர்தல் முடிவுகள், டிசம்பர் 3ந் தேதி வெளியாகின்றன.

எனவே, இந்த ஆண்டு குளிர்கால கூட்டத்தொடர், தேர்தல் முடிவுகள் வெளியான சில நாட்களில், அதாவது டிசம்பர் மாதம் 2வது வாரத்தில் தொடங்கக்கூடும் என்று டெல்லி வட்டாரங்கள் தெரிவித்தன. கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன்பாக, கூட்டத்தொடர் முடிவடையும் என்று தெரிகிறது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட இந்திய தண்டனை சட்டம், குற்றவியல் நடைமுறை சட்டம், இந்திய சாட்சியங்கள் சட்டம் ஆகிய குற்றவியல் சட்டங்களுக்கு மாற்றாக 3 புதிய மசோதாக்கள் கடந்த மழைக்கால கூட்ட த்தொடரில் தாக்கல் செய்யப்பட்டன. அம்மசோதாக்களை ஆய்வு செய்த உள்துறை தொடர்பான பாராளுமன்ற நிலைக்குழு தனது அறிக்கைகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே, குளிர்கால கூட்டத்தொடரில் அந்த 3 மசோதாக்கள், பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிகிறது. அவற்றை நிறைவேற்ற மத்திய அரசு முயற்சி மேற்கொள்ளும் வாய்ப்புள்ளது.

தலைமை தேர்தல் கமிஷனர், தேர்தல் கமிஷனர்கள் நியமனம் தொடர்பான முக்கிய மசோதாவும் நிலுவையில் உள்ளது. மழைக்கால கூட்டத்தொடரில் அம்மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

தலைமை தேர்தல் கமிஷனர்கள் மற்றும் தேர்தல் கமிஷனர்கள் தற்போது சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி அந்தஸ்தில் உள்ளனர். அவர்களை மந்திரிசபை செயலாளர் அந்தஸ்துக்கு மாற்ற இம்மசோதா வகை செய்கிறது. அதற்கு எதிர்க்கட்சிகளும், முன்னாள் தலைமை தேர்தல் கமிஷனர்களும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில்

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் 600 இடங்களில் நீட் விலக்கு, நம் இலக்கு கையெழுத்து இயக்கம்!



## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

**10.11.2023 வெள்ளிக்கிழமை காலை 8.00 - மாலை 7.00 மணி**

காஞ்சிபுரம் மாநகரம்

| பகுதி | தலைமை | முன்னிலை | வட்டங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. 1வது பகுதி | சி.கே.வி.தமிழ்செல்வன் | கே.திலகர் | 1,2,3,4,5,6,7,8,9,10,16,17,18 | 26 இடங்கள் |
| 2. 2வது பகுதி | சி.கே.வி.தமிழ்செல்வன் | எஸ்.சந்துரு | 19,20,21,22,23,24,25,26,27,28,29,30 | 24 இடங்கள் |
| 3. 3வது பகுதி | சி.கே.வி.தமிழ்செல்வன் | அ.தசரதன் | 31,32,33,34,35,36,45,46,47,48,49,50,51 | 26 இடங்கள் |
| 4. 4வது பகுதி | சி.கே.வி.தமிழ்செல்வன் | சு.வெங்கடேசன் | 11,12,13,14,15,37,38,39,40,41,42,43,44 | 26 இடங்கள் |

**15.11.2023 புதன்கிழமை காலை 8.00 - மாலை 7.00 மணி**

நகரம்

| நகரம் | தலைமை | வட்டங்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. மதுராந்தகம் | கே.குமார் | 1 முதல் 24 வட்டங்கள் | 24 இடங்கள் |

ஒன்றியங்கள்

| ஒன்றியம் | தலைமை | ஊராட்சிகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. உத்திரமேரூர் | கெ.ஞானசேகரன் | 38 ஊராட்சிகள் | 38 இடங்கள் |
| 2. சாலவாக்கம் | டி.குமார் | 35 ஊராட்சிகள் | 35 இடங்கள் |
| 3. காஞ்சிபுரம் தெற்கு | க.குமணன் | 16 ஊராட்சிகள் | 16 இடங்கள் |
| 4. காஞ்சிபுரம் வடக்கு | பி.எம்.குமார் | 24 ஊராட்சிகள் | 31 இடங்கள் |
| 5. வாலாஜாபாத் தெற்கு | பி.சேகர் | 30 ஊராட்சிகள் | 30 இடங்கள் |
| 6. வாலாஜாபாத் வடக்கு | பி.எம்.பாபு | 31 ஊராட்சிகள் | 24 இடங்கள் |
| 7. மதுராந்தகம் வடக்கு | பி.எச்.சத்தியசாய் | 23 ஊராட்சிகள் | 23 இடங்கள் |
| 8. மதராந்தகம் தெற்கு | பொன்.சிவகுமார் | 35 ஊராட்சிகள் | 35 இடங்கள் |
| 9. அச்சிறுப்பாக்கம் வடக்கு | ஜி.தம்பு | 27 ஊராட்சிகள் | 27 இடங்கள் |
| 10. அச்சிறுப்பாக்கம் தெற்கு | கே.கண்ணன் | 32 ஊராட்சிகள் | 32 இடங்கள் |
| 11. சித்தாமூர் கிழக்கு | ஏ.சிற்றரசு | 18 ஊராட்சிகள் | 22 இடங்கள் |
| 12. சித்தாமூர் மேற்கு | வி.ஏழுமலை | 25 ஊராட்சிகள் | 25 இடங்கள் |
| 13. லத்தூர் வடக்கு | கே.எஸ்.ராமச்சந்திரன் | 25 ஊராட்சிகள் | 25 இடங்கள் |
| 14. லத்தூர் தெற்கு | எம்.எஸ்.பாபு | 16 ஊராட்சிகள் | 16 இடங்கள் |
| 15. திருக்கழுக்குன்றம் தெற்கு | இ.சரவணன் | 11 ஊராட்சிகள் | 11 இடங்கள் |

பேரூர்

| பேரூர் | தலைமை | வட்டங்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. உத்திரமேரூர் | என்.எஸ்.பாரிவள்ளல் | 18 வார்டுகள் | 18 இடங்கள் |
| 2. வாலாஜாபாத் | என்.பாண்டியன் | 15 வார்டுகள் | 15 இடங்கள் |
| 3. கருங்குழி | எ.சுந்தரமூர்த்தி | 15 வார்டுகள் | 15 இடங்கள் |
| 4. அச்சிறுப்பாக்கம் | வி.டி.ஆர்.வி.எழிலரசன் | 15 வார்டுகள் | 15 இடங்கள் |
| 5. இடைக்கழிநாடு | டி.மோகன்தாஸ் | 21 வார்டுகள் | 21 இடங்கள் |

**க.சுந்தர் எம்.எல்.ஏ.**
செயலாளர்
காஞ்சிபுரம் தெற்கு மாட்ட தி.மு.க.

நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி சார்பில்

# ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கம்

## நகர கழக செயலாளர்கள் த.விஜய்கண்ணன் - ஜி.எஸ்.ஞானசேகர் பங்கேற்பு!

நாமக்கல், நவ.10-

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். எம்.மதுரா செந்தில் ஆலோசனையின் பேரில் நாமக்கல் மேற்கு மாவட்டம் குமாரபாளையத்தில் மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி சார்பில் “நீட்விலக்கு நம் இலக்கு” என்ற நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.பாலாஜி ஆலோசனைப்படி மாவட்ட இளைஞர் அணி துணை துணை அமைப்பாளர் கதிரவன் சேகர் மற்றும் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஐயப்பன் (எ) பெருமாள் முன்னேற்பாட்டில் குமாரபாளையத்தில் “நீட் விலக்கு நம் இலக்கு” கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

குமாரபாளையம் வடக்கு நகர பொறுப்பாளரும், நகர மன்ற தலைவருமான த.விஜய் கண்ணன் மற்றும் தெற்கு நகர பொறுப்பாளர் ஜி.எஸ். ஞானசேகர் தலைமை தாங்கினர்.

குமாரபாளையம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் துவங்கப்பட்ட நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தில் கல்லூரி மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் கையெழுத்திட்டனர். இதில் நகர பொறுப்பு குழு உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், வார்டு கழக செயலாளர்கள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மூலனூர் ஒன்றியம், வேளாம்பூண்டி, குமாரபாளையம், கோட்டைமருதூர் ஆகிய ஊராட்சிகளில் ரூ. 2.20 கோடி திட்ட மதிப்பீட்டில் பல்வேறு திட்டப்பணிகளை ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தார். இதில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மூலனூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய துணைப் பெருந்தலைவர் ப.பழனிசாமி, ஒன்றிய பெருந்தலைவர் சுமதி கார்த்திக், பேரூர் கழக செயலாளர், பேரூராட்சி தலைவர், மக்கள் தெண்டபாணி, மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் கார்த்தி உள்பட ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**குன்னூர் மு. அரங்கநாதன்**
**நவம்பர் 10 (2014)**



நீலகிரி மாவட்டத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவர்.

குன்னூர் நகர பொருளாளர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

குன்னூர் நகராட்சித் தலைவர், குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் நலப்பணிகளை சிறப்பாக செயல்படுத்தியவர்.

கழகப் பணியில் தொய்வு ஏற்படக்கூடாது என்று திருமணம்கூட செய்து கொள்ளாதவர்.

இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து பலமுறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில் வறிய நிலையில் உள்ள கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழியாக தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார். இந்த நிகழ்வின் போது, தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், இயல், இசை, நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# தீபாவளி தீக்காய சிறப்பு உள்நோயாளிகள் பிரிவு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ.10-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று முன்தினம் (08.11.2023), சென்னை, கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில், தீபாவளி தீக்காய சிறப்பு உள்நோயாளிகள் பிரிவு தொடங்கி வைத்தார். தமிழ்நாடு தீயணைப்புத் துறையின் சார்பில் தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு நடத்தப்பட்ட தீயணைப்பு விழிப்புணர்வு ஒத்திகை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்விற்கு பிறகு, கீழ் பாக்கம் மருத்துவக் கல்லூரி செவிலியர் பயிற்சி பள்ளி மாணவிகள் பட்டாசு வெடிக் கும் போது தீக்காயம் ஏற்ப டாதவாறு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சியினை நடத்தி னார்.

பின்னர், லக்ஷயா (LaQshya) தரச்சான்றிதழ் கீழ் பாக்கம் அரசு மருத்துவக் கல் லூரி மருத்துவனைக்கு தொடர்ந்து 2வது முறையாக தரப்பட்டுள்ளது. மேலும், லக் ஷயா (LaQshya) தரச்சான்றித ழின் உச்சகட்ட அளவுகோ ளான பிளாட்டினம் அளவீட்டினை கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவனை அடைந்துள் ளது என்பது குறிப்பிடத்தக் கது. அந்த சான்றிதழ் அமைச் சர் அவர்களிடம் காண்பித்து வாழ்த்துப் பெறப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களி டம் அமைச்சர் மா.சுப்ரம ணியன் தெரிவித்ததாவது;

தீபாவளி பண்டிகை நெருங்கி வருவதையொட்டி, பாதுகாப்புடன் பட்டாசு வெடிப்பதும், தீ விபத்து இல் லாத தீபாவளி என்கின்ற வகையில் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, காவல் துறை, தீயணைப்புத்துறை மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் பட்டாசு வெடிப்ப தற்குரிய நேரம், பாதுகாப் பாக பட்டாசு வெடிப்பது எப்படி என்பது போன்ற பல் வேறு விழிப்புணர்வுகளை தொடர்ச்சியாக ஏற்படுத்தி வருகிறது. அந்த வகையில் விபத்துகள் நேராத வகையில் இந்த தீபாவளி சிறப்பாக நடைபெற வேண்டும் என்று அனைவரும் கருதுகிறோம். அதையும் மீறி எங்கேயாவது தீ விபத்துகள் ஏற்பட்டால் அவர்களை பாதுகாப்பதற்கு ரிய முன்னெச்சரிக்கை நடவ டிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது.

அதேபோல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவ மனைகள், வட்டார மருத்து வமனைகள் என்று 95 இடங் களில் தீ விபத்திற்கான சிறப்பு வார்டுகள் உருவாக்கப்பட்டி ருக்கிறது. 750 படுக்கைகளு டன் 95 மருத்துவமனைகளில் இந்த வசதிகள் செய்யப்பட் டிருக்கிறது. இந்த 95 மருத்து வமனைகளிலும் தீ விபத்து கள் நேர்ந்தால் அதற்கு தேவையான மருந்து போன்ற உபகரணங்கள் போதுமான அளவில் இருப்பு உறுதி செய் யப்படுகிறது. அந்தவகையில் சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் உள்ள சிறப்பு தீக் காய பிரிவு பழமை வாய்ந்த ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் மட்டு மல்ல, தமிழ்நாட்டை சுற்றி யுள்ள பல்வேறு மாநிலங்க ளுக்கும் இம்மருத்துவமனை சிறப்பு தீக்காய அமைப்பாக செயல்பட்டு வருகிறது. 1973 ஆம் ஆண்டு 10 படுக்கைகளு டன் தொடங்கப்பட்ட சிறப்பு தீக்காய பிரிவு இன் றைக்கு தமிழகத்தில் மட்டு மல்ல இந்தியாவிற்கே சிறந்த அடையாளமாக விளங்கி கொண்டிருக்கிறது. 24 மணி நேரமும் மருத்துவர்களும், செவிலியர்களும், மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்க ளும் தீக்காயம் ஏற்பட்ட நோயாளிகளுக்கு தீவிர சிகிச்சை அளித்து வருகிறார் கள். தமிழ்நாட்டினை ஒட்டி யுள்ள அண்டை மாநிலங் களை சேர்ந்தவர்களும் பயன்பெற்று வருகிறார்கள். 24 மணி நேரமும் அறுவை அரங்குகள் தயார் நிலையில் இருந்துக் கொண்டிருக்கிறது. கடந்த காலங்களில் தீபாவளி பண்டிகையினையொட்டி 2020 இல் 15 பேர் தீக்காயத்தி னால் பாதிக்கப்பட்டு ஒருவர் இறந்திருக்கிறார்.

2021 பொறுத்தவரை 30 பேர் பாதிக்கப்பட்டனர், இறப்பு எதுவும் இல்லை. 2022 ஆம் ஆண்டை பொறுத் தவரை 38 பேர் பாதிக்கப் பட்டு இறப்பு எதுவும் ஏற்ப டவில்லை. எனவே கடந்த 2 ஆண்டுகளாக தீபாவளி தீ விபத்தில் இறப்புகள் இல்லை என்ற நிலை தொடர்ந்துக் கொண்டிருக்கிறது. இன்று சிறப்பு தீக்காய பிரிவில் 20 படுக்கைகள் வசதிகளுடன் கூடிய சிறப்பு வார்டு உரு வாக்கப்பட்டு திறந்து வைக் கப்பட்டுள்ளது. இதில் 5 வெண்டிலேட்டர் கருவிகளு டன் ஆண்களுக்கான வார் டில் 12 படுக்கைகளும், பெண்கள் மற்றும் குழந்தைக ளுக்கான வார்டில் 8 படுக்கை கள் உள்ளது.

### டெங்கு

டெங்குவினால் இந்தாண்டு 6,345 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர். மழைக்கா லம் என்பதால் அங்கங்கே தேங்கி நிற்கும் மழைநீரினால் ஏடிஸ் கொசு மூலம் டெங்கு பாதிப்பு ஏற்படுகிறது. இந்த பாதிப்பு வடகிழக்கு பருவ மழைக்காலங்களில் அதிக மாக பரவும். டெங்கு பாதிப் புகள் மருத்துவத் துறையின் சீரிய நடவடிக்கைகளினால் கட்டுக்குள் இருக்கின்றது. நேற்றுக்கான ஒருநாள் பாதிப்பு 54 ஆகும். மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருபவர்களின் எண்ணிக்கை தற்போது வரை 525 பேர். அனைவருக்கும் நல்ல முறை யில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செய லாளர் ககன்தீப் சிங் பேடி, கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. முத் துச்செல்வன், தீக்காய சிகிச் சைப் பிரிவு துறைத் தலைவர் மரு.நெல்லையப்பர், மருத்து வமனை கண்காணிப்பாளர் மரு.ஆயிஷா, நிலைய மருத் துவ அலுவலர் மரு.வாணி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வானளாவிய அதிகாரம் இருப்பதாக சண்டித்தனம் செய்யும்

# ஆளுநர்களை உச்சநீதிமன்றம் கண்டிப்பு!

## 'தீக்கதிர்' நாளேடு தலையங்கம்!

சென்னை, நவ. 10-

வானளாவிய அதிகாரம் தங்களுக்கு இருப்பதாக கரு திக் கொண்டு வானத்துக்கும் பூமிக்கும் தாவிக் குதிக்கும் ஆணவ ஆளுநர்களின் தலை யில் உச்சநீதிமன்றம் ஓங்கிக் குட்டு வைத்துள்ளது என தீக் கதிர் நாளேடு 8.11.2023 அன்று தலையங்கம் வெளி யிட்டுள்ளது.

அத்தலையங்கம் வரு மாறு:

வானளாவிய அதிகாரம் தங்களுக்கு இருப்பதாகக் கரு திக் கொண்டு வானத்துக்கும், பூமிக்கும் தாவிக்குதிக்கும் ஆணவ ஆளுநர்களின் தலை யில் உச்சநீதிமன்றம் ஓங்கிக் குட்டு வைத்துள்ளது. மாநில சட்டப் பேரவைகளில் நிறை வேற்றப்பட்ட சட்ட முன்வ ரைவுகளுக்கு ஒப்புதல் அளிக் காமல் சண்டித்தனம் செய்யும் ஆளுநர்களை உச்ச நீதிமன்றம் கண்டித்துள்ளது.



பஞ்சாப் மாநில அரசு அந்த மாநிலத்தின் ஆளுநர் பன்வாரிலால் புரோகித் மீது உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தது. பண மசோதா உட்பட மாநில சட் டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோ தாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க மறுப்பதை சுட்டிக் காட்டி குறிப்பிட்ட கால வரையறைக்குள் ஆளுநர் கள் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என பஞ் சாப் அரசு கோரியிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை நீதி பதி டி.ஒய்.சந்திரசூட் தலை மையிலான அமர்வு, ஆளுநர் கள் மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்டவர்கள் அல்ல என் றும், மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க மாநில அரசுகள் உச்சநீதி மன்றத்தை நாட வேண் டியிருப்பது பொருத்த மானதல்ல; ஆளுநர்கள் தங்களது போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் மிகச் சரி யாக சுட்டிக் காட்டி யுள்ளது.

ஆளுநர்கள் மசோதாக்க ளுக்கு ஒப்புதல் அளிக்க மறுப் பது குறித்து தமிழ்நாடு அர சும், கேரள அரசும், உச்சநீதிமன்றத்தில் மனுதாக் கல் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த வழக்குகளையும் சேர்த்து விசாரிப்ப தாக தலைமை நீதி பதி தலைமையிலான அமர்வு கூறி யுள்ளது.

ஆன்லைன் லாட்டரி மோசடிக்கு தடை விதிக்கும் மசோதா தமிழக சட்டப் பேரவையில் நிறை வேற்றப்பட்ட நிலையில் ஆளுநர் ரவி அதற்கு ஒப்புதல் அளிக்காமல் காலதாமதம் செய்தார். உச்சநீதிமன்றம் தலையிட்டு கேள்வி எழுப் பிய பிறகே அந்த மசோதா விற்கு ஆளுநர் ஒப்புதல் அளித்தார். அதேபோல தெலுங்கானா மாநில அரசும் உச்சநீதிமன்றத்தை நாடிய பிறகே அந்த மாநில ஆளுநர் தமிழிசை சவுந்தரராசன் சில மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்தார்.

ஒன்றிய பா.ஜ.க அரசு ஆர்.எஸ்.எஸ். கருத்தியல் கொண்டவர்களையே ஆளு நர்களாக நியமிக்கிறது. அவர் கள் அரசியல் சட்டக் கடமை களை மறந்துவிட்டு ஆர்.எஸ். எஸ். பிரச்சாரகர்களாக மாறி குறுக்குச்சால் ஓட்டி குழப்பம் விளைவிக்கின்றனர்.

பஞ்சாப் ஆளுநருக்கு உச் சநீதிமன்றம் கூறியுள்ள அறி வுரை தமிழகம், கேரளம், தெலுங்கானா, மேற்குவங் கம், புதுதில்லி ஆளுநர்களுக் கும் பொருந்தும், இனிமேலா வது அவர்கள் தங்களுக்குரிய பணி யை மட்டும் செய்ய முன் வர வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத் தில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு

நெடுஞ்சாலைத்துறை

கலைஞர் 100 1924 - 2023

திருவண்ணாமலை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒ.அ.எண். 36/2023–24/ தவஅ/ நாள்: 07.11.2023.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, திருவண்ணாமலை வட்டம் அவர்களால், திருவண்ணாமலை (நெ), க(ம)ப கோட்டத்திற்குட்பட்ட தண்டராம்பட்டு (நெ), க(ம)ப, உட்கோட்டத்தைச் சார்ந்த சி.ஆர்.ஐ.டி.பி 2023–24, ஒரு பணிக்கு **(TVM 36)** இருஉறை முறையில் இணையவழி மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **22.11.2023 அன்று 12.00 மணி** வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **10.11.2023** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./5919/ஒப்பந்தப்புள்ளி/2023

கண்காணிப்புப்பொறியாளர்(நெ), க(ம)ப, வட்டம், திருவண்ணாமலை



சேலம் கிழக்கு மாவட்டம் வீரபாண்டி ஒன்றிய கழகத்தின் சார்பில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்.எஸ்.ஆர். சிவலிங்கம் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர். எஸ்.ஆர்.பார்த்திபன். 'மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர். டாக்டர். ஏ. கே.தருண். மாவட்ட துணைச்செயலாளர். க.சுரேஷ்குமார். ஒன்றிய கழக செயலாளர். வெண்ணிலா சேகர். நெசவாளர் அணி அமைப்பாளர். ஏ ஏ. ஆறுமுகம். பேரூர் கழக செயலாளர். முருக பிரகாஷ், பூலாவரி எஸ்.சேகர் ஆகியோர் உள்ளனர்.

### தமிழ்நாட்டில் ஒருபோதும் பா.ஜ.க. ஆட்சி அமைக்க முடியாது!

# இந்து சமய அறநிலையத்துறை சார்பில் எண்ணிலடங்கா திட்டங்கள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!



சென்னை, நவ.10-

தமிழ்நாட்டில் ஒருபோ தும் பா.ஜ.க. ஆட்சி அமைக்க முடியாது என்றும் மாநிலத்தில் இந்து அறநி லையத்துறை சார்பில் எண் ணிலடங்கா திட்டங்களை நிறைவேற்றி வருகின்றோம் என்றும் அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னை, மெரினா கடற்கரை சாலையில் வீர மாமுனிவர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியபின் நேற்று முன்தினம் (08.11.2023) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரி வித்ததாவது:

திராவிட முன்னேற்ற கழகத்தை பொறுத்த அள வில் ஆத்திகர்கள் நாத்திகர் கள் ஒருசேர்ந்த நாடு இந்த நாடு. இதில் பெரியார் கொள்கைகளும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டி யவை. இந்து மதத்தையும் ஏற்றுக் கொள்கின்ற நிலை யில் தான் இந்த அரசு நடந்து கொண்டிருக்கின் றது. முதல் கையெழுத்து என்று சொல்பவர் கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கில் உதித்தாலும் உதிக்குமே தவிர, பாரதிய ஜனதா விற்கு ஆட்சி அதிகாரம் என் பது தமிழகத்தில் எத்தனை குட்டி கரணங்கள் அடித்தா லும் சரி, எத்தனை ஐ.டி. ரைடுகள் நடந்தாலும் சரி, எத்தனை இ.டி. ரைடுகள் நடந்தாலும் சரி, தமிழகத் தில் இன்னொரு கால் நூற் றாண்டுக்கு திராவிட முன் னேற்ற கழக ஆட்சியை தவிர வேறு எந்த கட்சியும் ஆட்சி அமைப்பதற்கு நினைத்துப் பார்க்கக்கூடிய அளவிற்கு கூட ஒரு சூழ் நிலை தமிழகத்தில் நிலவ வில்லை.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரும்பு மனிதர்!

தமிழகத்தைப் பொறுத் தளவில் இது திராவிட மண். தமிழகத்தின் முதல்வர் தலைவர் தளபதி அவர்கள் ஒரு இரும்பு மனிதர். அவரு டைய அருமை பெருமை கள், அவர் ஆற்றுகின்ற மக் கள் நலத் திட்டங்களால் ஏற்கனவே தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழ கத்திற்கு இன்று இருக்கின்ற வாக்கு வங்கி 20% கூடி இருக்கின்றது என்பதுதான் திண்ணம். ஆகவே அண் ணாமலை போன்றவர்க ளுக்கு அதிகாரத்தில் கையெ ழுத்து இடுகின்ற வாய்ப்பை தமிழக மக்கள் எந்நாளும் வழங்கமாட்டார்கள்.

காய்த்த மரத்தில் தான் கல்லடி படுமென்பார்கள். எந்தக் காலத்திலும் இல் லாத அளவிற்கு இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 1,138 திருக்கோயில்களில் குட முழுக்கு நடைபெற்று இருக் கின்றது. இன்றைய தினம் வரை சுமார் 5,500 கோடி மதிப்பிலான திருக்கோயில் சொத்துக்கள் ஆக்கிரமிப்பா ளர்களிடமிருந்து மீட்கப் பட்டுள்ளன. திருக்கோயில் நிலங்கள் ரோவர் கருவியின் வாயிலாக சுமார் ஒரு லட் சத்து 55 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் அளவீடு செய்யப் பட்டு HRCE என்ற எல்லைக் கற்கள் பதிக்கப்பட்டு பாது காக்கப்பட்டுள்ளன. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு ஒரு கால பூஜை திட்டத்தில் 4,000 திருக்கோயில்கள் சேர்க்கப்பட்டு ரூ.80 கோடி அரசு மானியமாக வழங்கப் பட்டுள்ளது. ஒரு கால பூஜை திட்டத்திலுள்ள 13,000 திருக்கோயில்க ளுக் கான வைப்பு நிதி ஒரு லட்ச ரூபாயை 2 லட்சம் ரூபா யாக உயர்த்தி, அதற்கு ரூ.129.50 கோடி அரசு மானியமாக வழங்கப்பட் டுள்ளது. ஒரு கால பூஜை திட்டத்திற்கு மட்டும் இது வரை அரசின் சார்பில் ரூ.200 கோடி மானியமாக வழங்கப்பட்டு இருக் கின்றது.

நம் முன்னோர்கள் நமக்கு விட்டு சென்ற பொக் கிஷமான ஆயிரம் ஆண்டுக ளுக்கு மேற்பட்ட திருக் கோயில்களை பாதுகாப்ப தற்கு 2022-2023 ஆம் ஆண்டு ரூ.100 கோடியும், 2023-2024 ஆம் ஆண்டு ரூ.100 கோடியும் மானிய மாக வழங்கப்பட்டது. கன் னியாகுமரி தேவஸ்தான திருக்கோயில் பராமரிப்பு செலவிற்காக வழங்கப் பட்ட அரசு மானியம் ஒரு கோடி ரூபாயை 3 கோடி ரூபாயாக உயர்த்தியும், பின்னர் அதனை ஆறு கோடியாகவும், புது க் கோட்டை தேவஸ்தானத் திற்கு வழங்கப்பட்டு வந்த அரசு மானியம் ஒரு கோடி யை 3 கோடி ரூபாயாக உயர்த்தியும் வழங்கி இருக் கிறோம்.

### முழுநேர அன்னதான திட்டம்!

அதேபோல் தஞ்சாவூர் தேவஸ்தானத்திற்கு இதுவ ரையில் அரசின் சார்பில் மானியமே வழங்கப்பட வில்லை. முதன் முதலாக, முதலமைச்சர் அவர்கள் அந்த தேவஸ்தானத்தின் கட்டுப்பாட்டிற்கு கீழ் வரு கின்ற 88 திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராம ரிப்பு செலவிற்காக மூன்று கோடி ரூபாய் வழங்கி பெருமைப்படுத்தி இருக் கின்றார். இந்த ஆட்சி ஏற் பட்ட பிறகு முழு நேர அன் னதான திட்டம் 11 திருக்கோயில்களிலும், ஒரு வேளை அன்னதான திட் டம் 10 திருக்கோயில்களி லும் விரிவாக்கம் செய்யப் பட்டுள்ளது.

திருநீர்மலை, திருக்க ழுக் குன்றம், திருப்பரங் குன்றத்தில் இருக்கின்ற காசி விஸ்வநாதர் திருக்கோ யில்க ளுக்கு புதிதாக நான்கு ரோப் கார்கள் அறிவிக்கப் பட்டுள்ளது. ஒருங்கி ணைந்த பெருந்திட்டத்தின் (Master Plan) 15 திருக்கோ யில்களில் ரூ.1,230 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. திருச்செந்தூர்,சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.200 கோடி செலவில் உப யதாரர் நிதியிலும், ரூ.100 கோடி செலவில் திருக்கோ யில் நிதியிலும் திருப்பணி கள் நடந்து கொண்டிருக் கின்றன. இப்படி ரூ.100 கோடிகளுக்கு மேலாக திருப்பணிகள் வட மாநிலங் களில் தான் இதுவரை கேள் விப்பட்டிருந்த நிலை மாறி நம்முடைய தமிழ்நாட்டி லும் நடைபெற்று வருகி றது. மாநில வல்லுநர் குழு வால் 8,006 திருக்கோயில்க ளுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள இதுவரையில் அனுமதி அளிக்கப்பட்டுள் ளது. கடந்த காலங்களை ஒப்பிடுகின்றபோது கடந்த 10 ஆண்டுகள் நடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ஒட்டு மொத்தமாகவே 1,800 கோயில்களுக்கு தான் மாநில வல்லுநர் குழு அனு மதி அளித்திருந்தது. ஆனால் நாம் இதுவரை 8,006 திருக் கோயில்களுக்கு அனுமதி வழங்கியுள்ளோம். அன் னைத் தமிழில் வழிபாடு, அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம், 5 ஆண்டு களுக்கு மேல் திருக்கோ யில்களில் தற்காலிகமாக பணிபுரிந்தவர்களை பணி நிரந்தரம் செய்தல் போன்ற எண்ணிலடங்கா திட்டங் களை செயல்படுத்தியுள் ளோம்.

### காலி பணி இடங்கள் நிரப்பல்!

அதேபோன்று திருக்கோ யிலில் காலியாக இருந்த பணியிடங்கள் தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூல மாக இதுவரையில் 240 நபர் கள் பணி நியமனம் செய் யப்பட்டுள்ளனர். 12 ஆண்டுகள் பதவி உயர்வு வழங்கப்படாமல் இருந்த சூழ்நிலையில் 539 அலுவ லர்கள் மற்றும் பணியாளர் களுக்கு பதவி உயர்வு வழங் கப்பட்டுள்ளது. இப்படி இந்து சமய அறநிலையத் துறை தமிழ்நாட்டில் 1959 ஆம் ஆண்டு உருவாக்கப் பட்ட பிறகு இப்படி எண் ணிலடங்கா சாதனையை எந்த ஆட்சியிலும் செய்யப் படவில்லை. முதலமைச்சர் தளபதி அவர்களின் நல் வழி காட்டுதலின்படி திட்டங் கள் எல்லாம் நிறைவேற்றப் படுவதால், மதரீதியாக ஜாதி ரீதியாக மக்களை பிளவு படுத்தி அதில் ஆதா யம் காண வேண்டும் என்று துடித்தவர்கள், இந்துக் களை ஏற்றுக் கொள்கின்ற இயக்கமாக திராவிட முன் னேற்றக் கழகம் இருப்ப தால் ஆன்மீகவாதிகளை அரவணைக்கின்ற இயக்க மாக திராவிட முன்னேற்றக் கழகமும் இந்த ஆட்சியும் இருப்பதால் அவர்களால் எதுவும் செய்ய முடி யவில்லை என்பதால் தான் இப்படி நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் முதல் கையெ ழுத்து என்று அறைகூவலிடு கிறார்கள்.

அத்தைக்கு மீசை முளைக்கட்டும் அதன் பிறகு சித்தப்பாவா இல்லையா என்று முடிவு செய்யலாம்.

சனாதனத்தை பற்றி கூறி யதற்கு விளக்கமாக நேற் றைக்கு என் சார்பிலே ஆஜ ரான மூத்த வழக்கறிஞர் ஜோதி அவர்கள் தெளி வான விளக்கத்தை அளித்தி ருக்கின்றார். அந்த விளக் கமே சனாதனத்தை பற்றி பேசுபவர்களுக்கு ஒரு பதி லாக எடுத்துக் கொள்ள லாம். அந்த நிலைபாட்டிலே நாங்கள் ஆணித்தரமாக இருக்கின்றோம்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் கூறினார்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தருமபுரி மேற்கு மாவட்டம், மாரண்டஅள்ளி பேரூரைச் சேர்ந்த எம்.ஆர்.கார்த்திகேயன் மற்றும் பொ.மல்லாபுரம் பேரூரைச் சேர்ந்த கு.புஷ்பராஜ், எம்.ரஹிமான்கான், ந.மோகன்குமார், த.ஆனந்த் ஆகியோர் தங்களது செய லுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட் டுள்ளார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 8-11-2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## துறைமுகம் நா. இராமதாஸ்
## நவம்பர் 10 (2016)



துறைமுகம் பகுதி வட்டாரத்தின் ஆரம்ப கால கழகத் தோழர்.

கழகத்திற்கு, தொடக்க காலத்தில், பகுதிச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டபோது, துறைமுகம் பகுதிக் கழகத்தின் செயலாளராக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புக்குரியவர் இவர்.

கழக மூத்த தலைவர்களுடனும், முன்னோடிகளுடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர்.

ஸ்டான்லி அரசு பொது மருத்துவமனை ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# பெண்ணுரிமை பாதுகாவலர் - பொற்கால ஆட்சியின் முதல்வர் தளபதி



தமிழ்நாட்டில் மக்களுக்குப் பாதுகாப்பான கட்சி தி.மு.க. என முடிவெடுத்த ஒட்டுமொத்த மக்களும் தெளிவான முடிவெடுத்து திமுகவை ஆதரித்து வருகிறார்கள்.

நிரந்தரமாக பெண்கள் முன்னேற்றத்திற்காக தெளிவான செயல்பாடுகளை உருவாக்கி அவர்கள் எதிர்காலத்தில் இந்தியாவிலேயே பெண்களின் முன்னேற்றம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் தொழிலில் முன்னேற்றம் வேலைவாய்ப்பில் முன்னேற்றம் படிப்பில் முன்னேற்றம் கல்வியில் மாபெரும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக சிறப்பான திராவிட மாடல் ஆட்சியை தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கி வருகிறார்.

தமிழ்நாட்டில் ஒட்டுமொத்த வாக்காளர்கள் 6 கோடியே 10 லட்சம் இதில் 3 கோடியே 10 லட்சம் பெண்கள் 3 கோடி பேர் ஆண்கள்.

தெளிவான சிந்தனையோடு ஒட்டுமொத்த பெண்களும் திராவிட மாடல் ஆட்சிக்கு வாக்களிப்பதற்கு தயாராகி விட்டார்கள்.

இன்றைக்கு எடப்பாடி பழனிச்சாமி பி.ஜே.பி. போடுகிற வித்தைக்கு கரணம் போட்டுக் கொண்டிருக்கிறார். இப்போது புதிய நாடகம் ஒன்றை எடப்பாடி பழனிச்சாமி அரங்கேற்றியுள்ளார்.

தனித்து நிற்போம் என்றும் பிஜேபியோடு கூட்டணி இல்லை எனவும் சொல்கிறார் எடப்பாடி. மக்கள் விரோத பிஜேபியின் செயலுக்கு துணைபோனவர் எடப்பாடி.

மக்கள் கடுமையாக எதிர்ப்பதால் தேர்தலில் டெபாசிட் கிடைக்காமல் செய்து விடுவார்கள் என்பதால்தான் எடப்பாடி போடும் இந்த நாடகத்தை மக்கள் நம்பமாட்டார்கள். பிஜேபி என்ன சொல்கிறதோ அதை அப்படியே சொல்கிறார்.

அரசின் சட்டமன்றம் நிறைவேற்றிய சட்ட மசோதாக்களை ஆளுநர் கையெழுத்திட்டு நிறைவேற்றாமல் மக்களால் தேர்ந்தெடுத்த அரசை மதிக்காமல் செயல்படுவதை எடப்பாடி பழனிசாமி ஏன் கண்டிக்க வில்லை. பிஜேபியுடன் கள்ளக் கூட்டணி உள்ளதால் தான். கவர்னர் மாளிகை தாக்கப்பட்டதாக ஒரு நாடகம் அரங்கேற்றியது ஆளுநர் மாளிகை. வேண்டும் என்றே சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டதாக கூறி சதி திட்டம் போட்டது பிஜேபி, அதிமுக கள்ள கூட்டணி. ஏன் எடப்பாடி பழனிசாமி இந்த போலி நாடகத்தைக் கண்டிக்க வில்லை?

காவல்துறை அதிகாரிகள் தெளிவாக விளக்கமாக சிசிடிவி கேமரா படத்துடன் ஊடகங்கள் மூலமாக மக்களுக்குத் தெரிவித்தார்கள். பிஜேபி சட்டம் ஒழுங்கை பற்றி பேசியதும் அதற்கு எடப்பாடி பழனிசாமி தீர நடந்ததை தெரிந்து கொள்ளாமல் அண்ணாமலை சொன்னதை அப்படியே சொல்கிறார்.

முதலமைச்சர் தளபதி அவர்கள் தமிழ்நாடு மக்கள் உரிமைக்காக தமிழகத்தின் நலனுக்காக ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பாதுகாப்புக்காக இளைஞர்களின் நலனுக்காக மகளிரின் உரிமைக்காக உழைத்து வருகிறார்.

ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் குடும்பத் தலைவிகள் தாய்மார்கள் அத்தனை பேருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் வங்கிக் கணக்கில் வருவதால் குடும்ப வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது.

குறிப்பாக பெண்களை இழிவாக பேசி வந்த சில குடும்பங்களில் மாத வருமானமாக பணம் வருவதால் அந்த குடும்பத்தில் சண்டைகள் சச்சரவுகள் இல்லாமல் இப்பொழுது குடும்ப உறவுகள் ஒற்றுமையாக இருப்பதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது இந்த கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம்.

குழந்தைகளுக்கு பால் வாங்குவதற்கு மருந்து வாங்குவதற்கு, எரிவாயு சிலிண்டர் வாங்குவதற்கு குடும்பத்தில் உள்ள அடிப்படை செலவுக்கு மற்றும் அத்தியாவசிய செலவுகளுக்கு பயன்படுத்திக் கொள்வதற்கு மிகப்பெரிய உதவியாக இருப்பதாக கிராமத்துப் பெண்கள் இன்றைக்கு மகிழ்ச்சியோடு முதலமைச்சர் தளபதி அவர்களை மனதார வாழ்த்துகிறார்கள்.

ஆயிரம் ரூபாய் மகளிருக்கு கொடுக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை என்கிற அற்புதமான திட்டத்தை இந்தியா முழுவதும் இருக்கிற அனைத்து கட்சிகளும் ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள்.

ஒரே நாளில் ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் வங்கி கணக்குகளில் எப்படி பணம் போட முடிந்தது என்று ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள்.

இதைப் பார்த்து தாங்கிக் கொள்ள முடியாமல் எடப்பாடி பழனிச்சாமி இந்த ஆயிரம் ரூபாய் கொடுப்பதால் மக்கள் வாக்களித்து விட மாட்டார்கள் என்றும் மக்கள் ஏமாற மாட்டார்கள் என்றெல்லாம் தன்னையே மறந்து எதை எதையோ பேசி வருகிறார் எடப்பாடி பழனிச்சாமி.

தமிழ்நாட்டில் தற்பொழுது 28 மாத காலத்தில் அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி ஒட்டுமொத்த மக்களும் பாராட்டுகிற மகிழ்ச்சியோடு முதலமைச்சரை வாழ்த்துகிற கிராமத்து மக்கள், ஏழை எளிய மக்கள், கூலித் தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள், பட்டியலின மக்கள் மலைவாழ் மக்கள் உட்பட அனைத்து தரப்பு மக்களும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுடைய மக்கள்நலத் திட்டங்களை பாராட்டுகிறார்கள்.

புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவது, செய்து முடித்த பணிகளை துவக்கி வைப்பது, தலைமை அலுவலகத்தில் முழுமையாக அதிகாரியோடு கலந்து தொடர் ஆலோசனைகள் என்று ஒரு நாளைக்கு 20 மணி நேரம் உழைக்கிற ஒரு முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அதிகாரிகள் ஆய்வுக் கூட்டம், காவல் துறை அதிகாரிகள் கூட்டம் முழுமையாக தமிழ்நாடு முழுவதும் அரசு அறிவித்த திட்டங்கள் ஒதுக்குகிற நிதி முழுமையாக சரியான நேரத்தில் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு வருகிறதா என்பதை மாவட்ட வாரியாக தெரிந்து கொள்வதற்கு நேரடியாக முதலமைச்சர் அவர்களே ஒவ்வொரு மண்டலமாக தமிழ்நாட்டில் நான்கு மாவட்டங்களை ஒன்றிணைத்து முழுமையாக அனைத்து துறை அதிகாரிகளையும் கொண்ட ஆய்வுக்கூட்டம் நடத்தி ஒட்டுமொத்தமாக நடைபெறுகிற திட்டங்கள், செயல்கள் அரசு ஒவ்வொரு ஆண்டும் நிதி நிலையில் ஒதுக்கும். நிதி. மக்களுக்கு சென்றடைகிறதா என ஆய்வு செய்தும் அனைத்து திட்டங்களையும் தன்னுடைய கட்டுப்பாட்டிலேயே வைத்து அமைச்சர்களையும் அழைத்து செய்த பணிகளைப் பற்றி முழுமையாக தெரிந்து இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கிற ஒரே முதலமைச்சர்.

குறிப்பாக இந்தியாவிலேயே மக்களுடைய பணிகளை அரசு அதிகாரி போல் தன்னுடைய செயல்பாட்டில் முழுமையாக எடுத்துக் கொண்டு செயல்படுத்தி வரும் முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள் தான்.

தற்பொழுது கிராமப்புறத்தில் வாழும் மக்களும் வேலைக்கு செல்லுகிற தாய்மார்கள் தனியார் கம்பெனிக்கு வேலைக்கு செல்லுகிற தாய்மார்கள் அரசு அலுவலகங்களுக்கு வேலைக்கு செல்லும் பெண்கள், தாய்மார்கள் குடும்பத்தில் காலையில் எழுந்ததும் உணவு சமைக்க முடியாத நிலையில் இருக்கும் தாய்மார்கள் உட்பட அத்தனை பேரும் தற்பொழுது முதல்வர் காலை உணவு திட்டத்தை பாராட்டுகிறார்கள். மகிழ்ச்சியோடு தாய்மார்கள் காலையில் சத்தான உணவுகளை வழங்கி வருகிற அரசு எப்போதும் இருக்க வேண்டும் என்கிறார்கள்.

மதியமும் உணவு வழங்கி விடுகிறார்கள். இரண்டு நேரமும் உணவு உண்டு படித்து வருவதால் பள்ளிக்கு செல்லாத குழந்தைகள் பள்ளிக்கு செல்ல மாட்டோம் என்று அடம் பிடித்து ஊருக்குள் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் எல்லோரும் இப்பொழுது பள்ளிக்கு செல்வதை பார்த்து மக்கள் பாராட்டுகிறார்கள்.



**கோவை கே.செல்வராஜ்**
முன்னாள் எம்.எல்.ஏ.
கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர்

17 லட்சம் குழந்தைகளுக்கு 404 கோடி நிதி ஒதுக்கி சுமார் 38005 பள்ளிகளில் முதல்வர் காலை உணவு திட்ட செயல் பாட்டை அனைத்து மாநில அரசுகளும் பாராட்டுகிறார்கள்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் தான் 92% குழந்தைகள் ஆரோக்கியமாக நல்ல திடகாத்திரமாக எந்த பாதிப்பும் இல்லாமல் இருக்கிறார்கள்.

தற்பொழுது ஒட்டுமொத்த தமிழ்நாட்டில் காலை உணவு திட்டம் 17 லட்சம் குழந்தைகளுக்கு 38 ஆயிரத்துக்கு அதிகமான பள்ளிகளில் வழங்கி வரும் ஒரு மாபெரும் வரலாற்று சிறப்புமிக்க திட்ட த்தைப் பார்த்து தெலுங்கானா மாநிலத்தினுடைய அதிகாரிகள் இங்கு வந்து பார்த்து இந்த திட்டத்தின் செயல்பாடுகளை தெரிந்து சென்று அக்டோபர் மாதம் 24 ஆம் தேதி அவர்கள் தெலுங்கானா மாநிலம் முழுவதும் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படிக்கிற குழந்தைகளுக்கு இந்த காலை சத்துணவு திட்டத்தை கொடுக்கிற செயலை துவக்கிஇருக்கிறார்கள்.

இன்றைக்கு ஒட்டுமொத்த இந்தியாவுக்கே தமிழ்நாடு வழிகாட்டும் மாநிலமாக விளங்கி வருகிறது.

இதெல்லாம் தெரியாமல் எடப்பாடி பழனிச்சாமி பேசி வருவது வேடிக்கையாக உள்ளது இவர் சுயநினைவோடு தான் பேசுகிறாரா என்று மக்களே கேட்கிறார்கள் .

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு திட்டம் விடியல் பயணம் அதாவது தமிழ்நாடு முழுவதும் தினசரி 50 லட்சத்திற்கும் அதிகமான தாய்மார்கள் பள்ளி மாணவ மாணவியர் அரசு பணிக்கு செல்லும் பெண்கள், தின கூலிவேலைக்கு செல்லும் பெண்கள், தனியார் கம்பெனி வேலைக்கு செல்லும் பெண்கள், வெளியூர் வேலைக்கு செல்லும் பெண்கள், மூத்த தாய்மார்கள் உட்பட ஒட்டுமொத்த பெண்களும் கட்டணம் இல்லாத விடியல் பஸ் பயணத்தில் இதுவரை பயன்படுத்திய தாய்மார்கள் 230 கோடி முறை விடியல் பஸ் பயணம் செய்திருக்கிறார்கள் என்பது ஒரு பெரிய வரலாற்று சிறப்புமிக்க சாதனை. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட ஒரு திட்டம் கிடையாது தாய்மார்கள் அத்தனை பேரும் இந்த ஆட்சியையும் தமிழக முதலமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறார்கள், வாழ்த்துகிறார்கள்.

இதையெல்லாம் தாங்கிக் கொள்ள முடியாத எடப்பாடி பழனிச்சாமியும் பிஜேபி தலைவர் அண்ணாமலையும் தினசரி ஒரு தவறான போலியான பொய்யான கருத்துக்களை வெளியிட்டு எதிர்காலம் இல்லாமல்போய்விடுமா என புலம்பிகொண்டிருக்கிறார்கள்.

கல்லூரிகளில் படிக்கும் மாணவிகள் அரசு கல்லூரிக்கு படிக்கச் செல்லும் மாணவிகள் சாதாரண கிராமப்புற ஏழை எளிய மாணவிகள் பின்தங்கிய குடும்ப மாணவிகள் உட்பட சுமார் மூன்று லட்சம் பெண்கள் கல்லூரி செல்லுகின்றனர். அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வங்கி கணக்கில் புதுமைப்பெண்கள் திட்டத்தின் மூலம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார் பஸ்ஸிலும் கட்டணம் இல்லாமல் சென்று விடுகிறார்கள்.

முந்தைய அதிமுக அரசின் 10 ஆண்டு கால ஆட்சியில் இரண்டு லட்சம் பேருக்கு இலவச மின் இணைப்பு ஆண்டுக்கு 20,000 பேருக்கு கொடுத்து வந்தார்கள்.

ஆனால் நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் தமிழ்நாடு முழுவதும் முதல் முறையாக ஒரு லட்சம் இலவச மின் இணைப்பு கொடுத்தார். இரண்டாவது முறையாக ஒரு 50,000 இலவச மின் இணைப்பும் மூன்றாவது முறையாக ஒரு 50 ஆயிரம் மின்னிணைப்பும் ஒட்டுமொத்தமாக 2 லட்சம் விவசாயிகளுக்கு 2ஆண்டு காலத்தில் இலவச மின் இணைப்பு கொடுத்துள்ளார்.

ஒட்டுமொத்த விவசாயிகள் தமிழ்நாட்டில் சுமார் 31 லட்சம் இலவச மின் இணைப்புகள் தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு மின்கட்டணத்தை. அரசு.மின்சாரதுறைக்கு பணம் கட்டிவருகிறது.

இந்தியாவிலேயே எந்த மாநில அரசும் செயல்படுத்தாத ஒரு சாதனையாக வரலாற்று சிறப்புமிக்க செயலாக விவசாயிகளுக்கு தனி வரவு செலவுத் திட்டம் தமிழ்நாடு திராவிட மாடல் ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் மூலம் தமிழ்நாடு முழுவதும் சிறு குறு விவசாயிகள் பயன்பெற்று காய்கறிகள் பழ வகைகள் விலை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதற்கு காரணம் நம்முடைய விவசாயிகள் முழுமையாக முன்னேற்றமடைய நம்முடைய வேளாண்மை துறை தான் காரணம்.

தமிழகமெங்கும் தலைவர் கலைஞர்அவர்கள் ஆட்சியில் உழவர் சந்தை ஆரம்பித்து விளைபொருட்களை நேரடியாக விற்று விவசாயிகளுக்கு நியாய மான விலைகிடைத்து வந்தது. இப்போது புதுப்பித்து விவசாயிகள் விளையும் காய்கறிகள் தேங்காய் பழவகைகள் நியாயமான விலையில் விற்பதால் பொது மக்களுக்குவிலை குறைவாக கிடைக்கிறது. விவசாயிகளின் பாதுகாவலராக முதல்வர் தளபதி விளங்குகிறார்.

தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் பள்ளிக்கு செல்லுகிற குழந்தைகள்உட்பட மாணவ. மாணவியர்கள் இப்பொழுது முழுமையாக சுயமாக படித்து நான் முதல்வன் திட்டத்தின் மூலம் லட்சக்கணக்கான மாணவ. மாணவிகள் முழுமையாக தேர்ச்சி பெறுகிற அளவுக்கு படித்து வருகிறார்கள்.

குறிப்பாக முதலமைச்சர் குடிமைப் பணி தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு மாதம்தோறும் 7500ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கும் முற்போக்கு திட்டத்தை அறிவித்தார்கள் அதன் அடிப்படையில் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் ஒன்றிய அரசின் தேர்வுகளுக்கு தயாராகி வரும் மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்காக யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன், ஸ்டாப் செலக்சன் கமிஷன், ரயில்வே ரெக்யூப்மெண்ட் போர்டு, இந்தியன் வங்கிகளில் அலுவலர்கள் தேர்வு ஆகிய பணிகளுக்கு தமிழ்நாடு இளைஞர்கள் இளம் பெண்கள் அதிக அளவில் வெற்றி பெற வேண்டும் என்பதுதான் நம்முடைய திராவிட மாடல் அரசின் கொள்கை. அந்த அடிப்படையில் ஒவ்வொரு மாணவருக்கும் மாதந்தோறும் 7500 ரூபாய் உதவித்தொகை வழங்கும் திட்டத்தை அறிவித்தஅரசு முதல் முறையாக 1000பேருக்கு விளையாட்டு இளைஞர்நலத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இதோடு மட்டுமல்ல இதுவரை இந்த திட்டத்தின் மூலம் நான் முதல்வன் என்கிற அந்த திட்டத்தின் மூலம் 13 லட்சம் மாணவ மாணவியர் பயனடைந்துள்ளனர்.

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் முதன்மைத் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கவும் நான் முதல்வன் போட்டி தேர்வு ஏற்படுத்தப்பட்டு ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இப்படி ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் மாணவர்கள் எல்லாத் துறைகளிலும் முதலிடத்திற்கு வர வேண்டும் என்கிற நோக்கத்தில் ஆண்டுக்கு கல்வித்துறைக்கு 47000கோடி ரூபாய் வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கி இந்தியாவிலேயே அதிகநிதியை கல்விக்கு கொடுத்து கல்வியில் முதலிடத்தில் தமிழ்நாடு இருக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் நடத்திய உள்ளாட்சி மன்ற தேர்தலில் முதல் முறையாக 50சதவீதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு ஏற்பாடு செய்து அதில் மலைவாழ் பெண்கள் பட்டியலின பெண்கள்உட்பட பொதுவாக 50 சதவீதத்திற்கு முழுமையாக பெண்களே தேர்ந்தெடுக்கப்பட்டு மாநகராட்சி மேயர்களாக 11 பேரும் நகராட்சி தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், கிராம பஞ்சாயத்து தலைவர்கள், அனைத்து தரப்பிலும் வார்டு உறுப்பினர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஒன்றிய பெருந் தலைவர்கள், மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள், மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள் உட்பட தமிழ்நாடு முழுவதும் இந்தியாவிலேயே 50% பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்து நிறைவேற்றிய முதல் மாநிலம் தமிழ்நாடு தான்.

மகளிர் உரிமையை முழுமையாக ஆணுக்கு இணையாக கொடுத்த மாநிலம் தமிழ்நாடு தான். இப்பொழுது அதிகமாக பெண் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதிகமான பெண் காவல்துறை உயர் அதிகாரிகள் தமிழ்நாடு முழுவதும் எல்லா பணிகளிலும் இன்றைக்கு பெண்அதிகாரிகள் அதிகமாக பணியாற்றுவதற்கு காரணம். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 1970 இல் பெண்களுக்கு அரசு பணியில் அரசின் அனைத்து துறைகளிலும் வேலை வாய்ப்பு கொடுக்கிற பொழுது நேர்முகத் தேர்வு நடத்தினாலும் டிஎன்பிஎஸ்சி மூலமாக தேர்ந்தெடுத்தாலும் 30 சதவீதம் கட்டாயம் அவர்களுக்கு ஒதுக்குவதற்கான சட்டத்தை நிறைவேற்றி அமல் படுத்தியதால் தான் தமிழ்நாட்டில் இந்தியாவிலேயே அதிக பெண் அரசு பணியாளர்கள் இருக்கும் மாநிலமாக தமிழ்நாடு இருப்பதற்கு காரணம்.

பெண்கள் முன்னேற்றமே ஒரு நாட்டினுடைய மாபெரும் முன்னேற்றம், வளர்ச்சி என்கிற அடிப்படையில் திராவிட மாடல் ஆட்சியில் நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள். பெண்களுக்கான ஏராளமான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி பெண்ணுரிமையை காக்கும் பாதுகாவலனாக பெண்களின் உரிமைகளை முழுமையாக நிலை நிறுத்தி அவர்களை உச்சபட்சமாக உயர்ந்த நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்பதற்காக அற்புதமான திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்.

மக்கள் தெளிவாக இருக்கிறார்கள் நல்ல முடிவு எடுப்பார்கள் 2024 பாராளுமன்றத் தேர்தலில் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் இந்திய மக்களும் இந்தியா இந்தியா இந்தியா என்கிற நிலைப்பாட்டில் இந்தியாவை காப்போம் ஜனநாயகத்தை காப்போம் பிஜேபியின்சர்வாதிகாரப் போக்கை அளிப்போம் மக்கள் விரோத பிஜேபிசெயல்பாட்டை முறியடிப்போம் மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்கிற அந்த தத்துவார்த்த அடிப்படையில் ஒட்டுமொத்த இந்திய மக்களை காக்க தமிழ்நாடு மக்கள் நல்ல முடிவு எடுப்பார்கள்.

தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிப்பார்கள். திராவிட முன்னேற்றக் கழக தலைவர் தளபதி அவர்கள் எடுக்கிற முயற்சிகள் இதுவரை தோல்வியடைந்ததாக வரலாறு கிடையாது. இந்தப் பாராளுமன்றத் தேர்தலுக்கான இந்த முயற்சியும் மாபெரும் வெற்றி பெறும் சாதனை படைக்கும் 2024 வென்று காட்டுவோம்.

பி.ஜே.பி., அ.தி.மு.க. மக்கள் விரோத கூட்டணியை டெபாசிட் இழக்கச் செய்து விரட்டி அடிப்போம்.



சேலம் கிழக்கு மாவட்டம் தலைவாசல் ஒருங்கிணைந்த தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் கலந்து கொண்டு உரையாற்றினார். மேலும் கிளைக் கழகச் செயலாளர்களுக்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பரிசு வழங்கினார். கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் மு.ரா.கருணாநிதி , மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் மணி, பாலமுருகன், அழகுவேல் மற்றும் வரகூர் ஜெயபால், தேவேந்திரன், ஒன்றிய நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

திருப்போரூர் தி.மு.க. செயலாளர் - பேரூராட்சி தலைவர் மு.தேவராஜ் - பொதுக்குழு உறுப்பினர் என்.பரந்தாமன் இல்ல மணவிழா!

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைக்கிறார்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் - மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!



சென்னை, நவ.10 -

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் காலவாக்கம் நினைவில் வாழும் ஆர்.முனுசாமி, மு.காளியம்மாள் மற்றும் பையனூர் நினைவில் வாழும் ஆறுமுகம் நலமுடன் கிளியம்மாள், ஆகியோரின் பேத்தியும் திருப்போரூர் தி.மு.க. செயலாளரும், பேரூராட்சி மன்றத் தலைவருமான மு.தேவராஜ், பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் செல்வி தேவராஜ் மகள் தே.மேனகாதேவிக்கும், சென்னை மாவட்டம், மாதவரம் வட்டம், வடபெரும்பாக்கம் நினைவில் வாழும் எம்.நடேசன்ஏகம்மாள் மற்றும் எருக்கஞ்சேரி நினைவில் வாழும் குட்டியப்பன்வள்ளியம்மாள் ஆகியோரின் பேரனும் தி.மு.க. தலைமை பொதுக்குழு உறுப்பினரும் வழக்கறிஞருமான நா.பரந்தாமன், உஷாராணி பரந்தாமன் ஆகியோரின் மகன் ந.ப.கருணாநிதிக்கும் திருமணம் சென்னை60, மாதவரம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ ராமலஷ்மி பேரடைஸ்ல்(ஏ.சி) இன்று (10.11.2023 - வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணியளவில் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்மாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில்மகேஷ் பொய்யாமொழி, இராணிப்பேட்டை ஆர்.காந்தி, பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், டி.ஆர்.பி.ராஜா, சி.வெ.கணேசன் மற்றும் தயாநிதி மாறன் எம்.பி, க.செல்வம் எம்.பி, கலாநிதி வீராசாமி எம்.பி, இ.கருணாநிதி எம்.எல்.ஏ, எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ, மீ.அ.வைத்தியலிங்கம் முன்னாள் எம்.எல்.ஏ, எஸ்.எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ, எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், இரா.கிரிராஜன் எம்.பி, டி.கே.எஸ். இளங்கோவன், ஆவடி சா.மு.நாசர், எம்.எல்.ஏ, தா.இளைய அருணா, எம்.சி, கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ, துரைசாமி மாவட்ட அவைத் தலைவர், து.மூர்த்தி முன்னாள் எம்.எல்.ஏ, மாமல்லபுரம் வி.விஸ்வநாதன், ஆர்.டி. சேகர், எம்.எல்.ஏ,

ஜே.ஜே.எபிநேசர் எம்.எல்.ஏ, வி.தமிழ்மணி முன்னாள் எம்.எல்.ஏ, ஜி.சி.அன்புசெழியன், தலைமைசெயற்குழு உறுப்பினர், பையனூர் பி.சேகர், வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ, தாயகம் கவி எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ, ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, மேயர் ஆர்.பிரியாராஜன், தாம்பரம் மேயர் கே.வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், ஆர்.டி.அரசு முன்னாள் எம்.எல்.ஏ, டி.யுவ ராஜ் பேரூராட்சி தலைவர், எஸ்.அப்சர்அலி, வி.சந்திரன், ஆர்.பரசுராமன், பூச்சி முருகன், கே.ஜெயக்குமார் எம்.பி, துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ, க.சுந்தரம், இ.ஏ.பி. சிவாஜி, சி.எச்.சேகர், அழகிரிசதாசிவம், ரா.நரேந்திரன், மு.ரமேஷ், குமாரி ரமேஷ் காலவாக்கம்.

மிசா.பா.மதிவாணன், வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு.ராஜேந்திரன், டி.ராமகிருஷ்ணன், பி.அறிவழகிபாலகிருஷ்ணன், எம்.ஆனந்தன், ஜெ.ஜெய்மதன், இரா.முருகேசன், பு.ஏ.ராஜி, பி.சாந்தி, என்.சந்திரன், என்.சிவலிங்கம் மாலதி,

பகுதிச் செயலாளர்கள் ஜி.துக்காராம், எம்.நாராயணன், பெ.சரவணன், ஜி.ராஜேந்திரன், தி.மு.தனியரசு, ஏ.வி.ஆறுமுகம், மா.அருள்தாசன்,மீ.வே.கருணாகரன், ஜி.தயாளன், க.ஜெயராமன், அ.முருகன், வா.பெ.சுரேஷ், செந்தில்குமார், ஜெபதாஸ்பாண்டியன், இரா.லட்சுமணன், படப்பை மனோகரன், மறைமலைநகர் சண்முகம், பம்மல் கர்ணா, ஜெய்குமார், சேகர், தமிழ்மணி, ஆதிமாறன், நரேந்திரன், ஏ. அன்புசெல்வன், ஆராமுதன், சந்தானம், வந்தேமாதரம், கோபால், கருணாநிதி, எம்.கே.டி.கார்த்திக், நரேஷ், கண்ணன், தேவேந்திரன், சங்கர், நடராஜன், சத்தியமூர்த்தி, அருள்தேவி, ஜெயச்சந்திரன், செங்குட்டுவன், பச்சையப்பன், ரமேஷ், கோல்டு பிரகாஷ், பிரபு, விஜயகுமார், கோவிந்தன், சதீஷ்,

மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய பிரதிநிதிகள் எஸ்.நந்தகோபால், தங்கமணிதிருமால், நா.ஜெகதீசன், வழுதிகை நா.செல்வசேகரன், எஸ்.நந்தினி, அ.ராஜேந்திரன், கா.காசிநாதன், ஏ.சந்திரன், பி.கனிமொழி, டி.கார்த்திகேயன், ஜி.துரைசாமி, இ.ஏழுமலை, எம்.குணசுந்தரி, பி.ஆஸ்னா மெரிசியா, மு.சிவக்குமார், பி.தம்பையா, கே.பி.சொக்கலிங்கம், டி.சி.வி.விஜயகுமாரி, உமாசரவணன், சரண்யா கலைவாணன், கவி கணேசன், சுசீலாராஜா, பானுமதிசுந்தர், பாரதிசரவணன், என்.ராமு, ஆர்.தமிழ்ச்செல்விரமேஷ், தமிழரசிகுமார் ஆர்.இ.ஆர்.விப்ரநாராணயன், என்.ஜானகிராமன், கே.ஆஷா கல்விநாதன், இரா.ஏ.பாபு, பண்ணை இ.சந்திரசேகர், ஜி.ரவிச்சந்திரன்,

திருப்போரூர் சிற்றூர் போரூர் நகர ஒன்றிய கழக தோழர்கள் மற்றும் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி மற்றும் உள்ள கழகத்தின் துணை அமைப்பினர் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பேரூராட்சி தலைவர் மு.தேவராஜ், செல்வி தேவராஜ், வழக்கறிஞர் என்.பரந்தாமன், உஷாராணி பரந்தாமன், ஆர்.வெங்கடேசன், ஆர்.ராஜாராம், ஆர்.தர்ஷினி ஆகியோர் வரவேற்கின்றனர்.

மாவட்ட பொறியாளர் அணி து.அமைப்பாளர் தே.செங்குட்டுவன் நன்றி கூறுகிறார்.



அரியலூர் மாவட்டக் கழக அவைத்தலைவர் சிவ.மாணிக்கம் அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பளிங்காநத்தம் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, அன்னாரின் திருவுடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் குன்னம் இராஜேந்திரன், செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மிசா கஞ்சனூர் கோ.கண்ணையன்**
**நவம்பர் 10 (1988)**




கழகம் துவங்கிய நாள் முதலே தஞ்சை மாவட்டக் கழக முன்னோடிகளான மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி அவர்களோடு இணந்து கழகப் பணியாற்றியவர்.

கஞ்சனூர் கிளைக் கழகச் செயலாளர், திருப்பனந்தாள் ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கஞ்சனூர் ஊராட்சித் தலைவராகவும் – நிலவள வங்கி துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


கலைஞர்
மகளிர் உரிமைத் திட்டம்
விரிவாக்க நிகழ்ச்சி
நாள் : 10.11.2023 வெள்ளிக்கிழமை
இடம் : கலைவாணர் அரங்கம், சென்னை
ARASU ARTS
உரிமைத் தொகை கோப்பில்
முதல்வரின் கையெழுத்து!
பெண்ணின் பெருமை போற்றும்
வரலாற்று பொன்னெழுத்து!!
சொன்னதைச் செய்தார்! செய்வதையே சொல்வார்!
அன்புடன்
பி.கே.சேகர்பாபு
சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் – இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

# திராவிட சினிமா

31


**■ வீ.மா.ச.சுபகுணராஜன்**

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

படங்கள் உதவி : ஞானம்







# மருதிருவர் இல்லாத சிவகெங்கைச் சீமை!

*ஆதார நூல்கள்: சிவகங்கைச் சரித்திரக் கும்மியும் அம்மானையும்- சர்க்கார் வெளியீடு; திருநெல்வேலி மானுவல்; ராமனாதபுரம் மானுவல்; மேஜர் வெல்ஷின் நாட்குறிப்பு; History Of Madras Army; Caldwell's History Of Tinnevelly:*

ஒரு தமிழ்த் திரைப்படம் இப்படியான அறிமுக அட்டையுடன் (டைட்டில் கார்டு) தொடங்கியது என நம்புவது சற்றுக் கடினம்தான். ஆனால், இப்படியான அறிமுகத்துடனேதான் ஆரம்பிக்கிறது 'சிவகெங்கைச் சீமை'. அதன் நில எல்லைகள், கிழவன் சேதுபதியின் மறவர் நாட்டு வரலாறுகள் பேசப்பட்டு, இறுதியாக வீர வேலுநாச்சியாருக்குப் பின்னர் மருதுபாண்டியர்கள் (பெரிய மருது, சின்ன மருது) அரியணை ஏறியதையும், வேலுநாச்சியாரின் மறைந்த கணவரின் பங்காளிகளான படமாத்தூர் உடையணத் தேவருடனான அவர்களது முரணும், வரலாறாகக் குரல்மொழியாக விளக்கப்படுகிறது. ஆனால், இந்த நீண்ட அறிமுகத்தால், திரைக்கதை பலவீனமாவதைப் பார்ப்போம். ஆம், வரலாற்று முரணை வாய்மொழியாகப் பேசி கதைக்களத்தைக் கற்பிதமாகக் கட்டமைத்ததன் விளைவு இது என்பேன்.

இனி, தமிழ் நிலத்தின் ஆங்கிலேய எதிர்ப்பு குறுநில மன்னர்கள், ஜமீன்களில் யார் மிகப் பிரபலமானவர் என்ற கேள்விக்கான பதிலைப் பார்ப்போம். அநேகமாகப் பலரும் வீரபாண்டிய கட்டபொம்மன் என்று சொல்லும் வாய்ப்பு அதிகம் என்று கருதுகிறேன். கொஞ்சம் வேடிக்கையானதாகத் தோன்றினாலும், அதற்கு ஒரு வகையில் காரணம் இரண்டு திரைப்படங்கள் என்று எண்ணுகிறேன். ஒன்று 'வீரபாண்டிய கட்டபொம்மன்', இரண்டாவது 'சிவகெங்கைச் சீமை'. ஓரளவில் சிவாஜி கணேசன், எஸ்.எஸ். ராஜேந்திரன் எனும் நடிகர்களின் பாத்திரமேற்பு, நடிப்பு காரணமாகத் தோன்றினாலும், திரைக்கதையமைப்பே பெரும் காரணமெனக் கருதுகிறேன்.

## இருப்பை இருட்டடிக்கும் நடிப்பு

'சிவகெங்கைச் சீமை' படத்தின் 'நாயக மையமாக' மருதிருவர் இல்லையென்பது கவனத்துக்குரியது. அதன் நாயகனான முத்தழகு ஒரு வரலாற்றுப் பாத்திரமல்ல. ஒரு வகையில் முத்தழகு சாமான்யனான திராவிட நாயகனாகவும் இருக்கிறான். ஆனால், திரைக்களத்தில் 'திராவிட நாயகத்துவத்துக்கான' வாய்ப்பும் அறவே இல்லை. ஒரு பாடல் காட்சியில் குதிரையில் ஆரோகணித்தபடி 'வீரர்கள் வாழும் திராவிட நாட்டை வென்றவர் கிடையாது' எனப் பாடுகிறான். அந்தப் பாடலிலேயே **'மன்றம்', 'முரசொலி'** எனத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடத்திய பத்திரிகைகளின் பட்டியல் வருகிறது.

இன்னொரு காட்சியில் ஆங்கிலேய ஆட்சி ஒழிந்தால், திராவிட மக்கள் விடுதலை பெறுவார்கள் எனப் பேசுகிறான். மற்றபடி எஸ்.எஸ்.ஆர் என்ற நடிகர் ஏற்ற பாத்திரம், மருதிருவர் இருப்பையே பலநேரங்களில் இருட்டடிப்புச் செய்கிறது. மருதிருவராக அவ்வை சண்முகம் மற்றும் பகவதி ஆகியோர் நடித்திருப்பதே அந்தப் பாத்திரங்களுக்கான முதன்மையை மறுக்கிறது.



கதைக்களத்தின் பெரும் முரண், முத்தழகு மற்றும் அவனது அண்ணன் சின்னச்சாமி (பி.எஸ்.வீரப்பா) தொடர்பானதாக மாறுகிறது. இன்னும் சரியாகச் சொல்வதானால் மருதிருவர் மற்றும் உடையணத் தேவர் வகையறாவின் பகைமுரண் முற்றிலுமாக, இந்தச் சகோதரர்களைச் சூத்திரதாரிகளாகக் கொண்டே நகர்கிறது.

## மருதிருவரை உயர்த்தாத யதார்த்தம்

வரலாற்றுப் பாத்திரங்கள் அல்லாதவர்களை மையமிட்டு, இயங்கும் திரைக்கதை, காட்சிக் களங்கள் மருதிருவர் மீதான கவனத்தைச் சிறிதாக்குகிறது என்பதே பிழை. இதற்கு இன்னொரு காரணியும் உண்டு. திரைப்படத்தின் நிகழ்களம் அசலான, மாடமாளிகை கூடகோபுரமற்ற எளிய சிவகங்கை அரண்மனையிலேயே எடுக்கப்பட்டது போன்ற தோற்றம் உள்ளது. கதை நிகழும் களங்களும் அசலான சிவகங்கை, காளையார் கோயில் பகுதிகளிலேயே படமாக்கப்பட்டுள்ளன. இதுவும் திரைக்கதையும் அற்புதமான யதார்த்தமான திரைப்பட உருவாக்கத்துக்கானதாக உள்ளனவெனினும், அவை ஒப்பீட்டில் மருதிருவரை, ஜெய்ப்பூர் மாளிகை முகப்பிலும், உப்பரிகையிலும் நடமாடும் கட்ட பொம்மன் நிலைக்கு உயர்த்த உதவவில்லை என்பதே கசப்பான உண்மை.

வீரபாண்டிய கட்டப்பொம்மன் படத்திலும் ஆதாரங்கள் பற்றிய தகவல்கள் உண்டெனினும், திரைக்கதை அமைத்த ம.பொ.சி / சக்தி கிருஷ்ணசாமி குழு, ஆதாரங்களைச் செதுக்கி கும்பினியார், ஆதிக்க எதிர்ப்பாளரான கட்டபொம்மனை, மாபெரும் சக்கரவர்த்தி நிலைக்கு உயர்த்தும் வேலையையும், கட்டபொம்மனை பெரும் நாயகத்துவ மையமாகவும் ஆக்க, சிவாஜி கணேசனின் கர்ஜனையும், பந்துலுவின் காட்சியாக்கமும் மீதத்தைச் செய்து முடித்தன. ஒரு வாதத்துக்கு கட்டபொம்மனாக ஜெமினி கணேசனையும், வெள்ளையத் தேவனாகச் சிவாஜியையும் வைத்துத் திரைக்கதை அமைக்கப்பட்டிருக்குமானால், என்னவாகியிருக்கும். அதுதான் இங்குப் பிரச்சினை.

காட்சியமைப்பில், இருப்பில் மருது சகோதரர்களைப் பின்னுக்குத் தள்ளி முத்தழகு முன்னணி பெறுகிறான். ஆங்கிலேயருடனான மோதல் என்றாலும், வசனங்களின் மையம் முத்தழகுவுக்குத்தான். எஸ்.எஸ்.ஆர் என்ற நடிகரின் வசன உச்சரிப்புக் கனலாய்த் தெறித்தாலும், ஓர் இடைவெளி விழுவதைத் தவிர்க்க இயலவில்லை. கூடுதலாக வரலாற்று நேர்மையுடன் கும்பினி அதிகாரி வெல்ஷூம், மார்ட்டினும் ஆங்கிலத்திலேயே உரையாட, அதற்கெதிரான முத்தழகுவின் முழக்கம் எடுபடுவதில்லை. ஒரு நிமிடம் கட்டபொம்மன் திரைப்படத்தில் பானர்மேன் ஜாவர் சீதாராமனும், கட்டபொம்மன் சிவாஜியும் பேசும் அந்தப் பிரபலக் காட்சியுடன் ஒப்பிட்டால் உண்மை விளங்கும்.

களம் உச்சத்தை நோக்கி நகரும் வேளையில், கொலைபாதகத் துரோகி கணவனுக்காகச் சின்னச்சாமியின் மனைவி (எம்.என்.ராஜம்), மருதிருவர் மனைவியருடன் (ஜி.வரலட்சுமி) வாதிடுவதும், அதன் தொடர்ச்சியாக, மனம் மாறி அவளே தன் கணவனைக் கொல்வதான காட்சியும் பலவீனமானவை. இதில் வேடிக்கை, துரோகி அண்ணனைக் கொல்லச் சபதமேற்ற முத்தழகு, அந்தக் காட்சியில் கதறி அழுகிறான். இந்த அபத்தக் காட்சி உச்சக்காட்சிக்கு முந்தியதையதாக இருக்கும்.

## குழப்பமான திரைக்கதை குவிமையம்

கண்ணதாசனின் திரைக்கதை பாத்திரமேற்றவருக்காக அமைக்கப்பட்டுக் காட்சிப் போக்கினை வலுவிழக்கச் செய்கிறது. கூடுதலாக அவரே தயாரிப்பாளர், பாடலாசிரியர் என்பதால், படத்தில் விஸ்வநாதன் - ராமமூர்த்தி இசையில் ஏகப்பட்ட நல்ல பாடல்கள். முத்தழகுவின் காதலியாக நாட்டியப் பேரொளி கமலா. இந்தப் பாத்திரம் அசலாக மருதிருவர் அம்மானையிலிருந்து பெறப்பட்ட பாத்திரம். அம்மானை அந்த மருதமரங்களை மருதிருவராகக் கற்பித்து வளர்த்த பெண்ணொருத்தியை மையமாகக் கொண்டு பாடப்பட்டது.

கமலாவைப் பங்கேற்கச் செய்தது ஐந்து பாடல் காட்சிகளுக்காகவும், திரைப்படத்தின் இறுதியில் வரும் உக்கிரமான நடனத்துக்காகவும் என்பது தெளிவு. உண்மையாகவே அவரது நடனம் இடம் பெறும் இறுதிக் காட்சியை மிகச் சிறப்பாகக் காட்சிப்படுத்தியுள்ளார் இயக்குநர் சங்கர். அந்த நடனமும் இறுதிவரை இடைவெட்டுக் காட்சிகளூடாகத் தொடர்வது சிறப்புதான். ஆனால், மறுபடியும் திரைப்படத்தின் குவிமையம் எது என்பது குறித்த குழப்பத்தை விளைவிப்பதை மறுப்பதற்கில்லை.

நம் கவனத்தை ஆக்கிரமிக்கும் இறுதிக் காட்சியின் நடனம் சிவகங்கைச் சீமையின் வீழ்ச்சியைக் காவிய சோகமாகக் காட்சிப்படுத்தி மருது சகோதரர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் உள்ளிட்ட அனைவரையும் கொன்று குவித்த, கும்பினியாரின் கொடூரம் கவன எல்லையிலிருந்து விலகுகிறது. தூக்குக் கயிற்றைத் துணிச்சலாக எதிர்கொள்வதைக் கூட இறுதியாக முத்தழகுக்குக் கொடுத்து களத்தின் மையத்திலிருந்து முற்றிலுமாக மருதிருவரிடமிருந்து பறித்து விடுகிறது திரைக்கதை. ஆம், திரைக்கதையின் ஊசலாட்டம் கதைக்களத்தின் குவிமையத்தைச் சிதைத்துவிட்ட விபரீதம் நேர்ந்து விடுகிறது.

...படம் விரியும்

## சொல்லிய வண்ணம் செயல்!

மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு, சராசரி தனிநபர் வருமானம், பொறியியல்துறை ஏற்றுமதி ஆகியவை சார்ந்த புள்ளி விவரங்கள் சமீபத்தில் வெளியாகியுள்ளன. அவற்றில் இந்திய அளவிலான வரிசையில், தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக உள்ளது. பொறியியல் ஏற்றுமதியில் மகாராஷ்டிரா மாநிலத்துக்கு அடுத்து, தமிழ்நாடு 16 சதவிகிதத்துடன் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. அதேபோல், இந்தியாவில் உள்ள பெரிய மாநிலங்களில் மக்களின் தனிநபர் வருமான சராசரியைப் பொறுத்தவரையில், தெலங்கானா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களே முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன. தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் சராசரியாக ரூ.2.75 இலட்சமாக உள்ளது. முதல் இரண்டு இடங்களில் உள்ள மாநிலங்களில் சராசரி வருமானம் ரூ.3 இலட்சமாகும்.

மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பிலும், இந்த ஆண்டில், தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் பொருளாதார மாநிலமாக தமிழ்நாடு உருவாகும் என நமது முதலமைச்சர் அறிவித்து, அதற்கான சூழலையும் உருவாக்கி வருவதே இந்தப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. சொல்லிய வண்ணம் செயல் என்பதே 'திராவிட மாடல்' என உலகுக்கு அறிவிக்கிறது.

## :ப்ளாஷ்பேக்





## எடைக்கு நிகராக நாணயம்!



முரளிசுப்பையா

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி நகருக்கு 1982-ஆம் ஆண்டு பிப்ரவரி 22 அன்று வருகை தந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு எடைக்கு நிகராக நாணயம் வழங்கும் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த விழாவில், என் தந்தை ஆலவயல் சுப்பையா அவர்கள் தலைவர் முன்பாக உரையாற்றினார். விழாவில், சிறுகதை மன்னர் எஸ்.எஸ்.தென்னரசு, மாவட்டச் செயலாளர் பெரியண்ணன், அறந்தாங்கி இராஜன், தியாகராஜ காடுவெட்டியார் ஆகியோரும் உடனிருந்தனர். தன் வாழ்நாள் முழுவதும், தன் நெஞ்சில் ஏந்திய தலைவர் கலைஞர் வழியில் தடம் மாறாமல் பயணித்து, வாழ்ந்து மறைந்த என் தந்தை வழியில் நானும் இன்றைக்குக் கழகப் பணியாற்றி வருகிறேன்.

**-ஆலவயல் முரளிசுப்பையா, புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### தடை மீறி நாடகங்கள்!

**1950-ஆம் ஆண்டு அக்டோபர் 22-ஆம் நாள் தி.மு.கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டம், சென்னை தங்க சாலைத் தெருவில் நடைபெற்றது. கழகப் பொதுக் கூட்டங்களுக்கு விதிக்கப்படும் தடை உத்தரவை மீறி, பேச்சுரிமையை நிலைநாட்ட வேண்டும் என்றும், தடை செய்யப்பட்ட கழக நாடகங்களான பேறறிஞர் அண்ணா எழுதிய 'இலட்சிய வரலாறு', கலைஞர் எழுதிய 'தூக்குமேடை', புலவர் குழந்தை எழுதிய 'இராவணக் காவியம்' உள்ளிட்ட நாடகங்களைத் தடையை மீறி நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

296




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131